விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 18 செவ்வாய்க்கிழமை (04.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 289

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து

## திருமலை சம்பூர் பிரதேசத்தில் புலிகளின் விமான ஓடுபாதையாம்

(கொழும்பு)

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதை ஒன்றை அமைத்திருப்பதாக பாதுகாப்புத் தரப்பிற்கு தகவல் கிடைத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரணப் பணியைப் பயன்படுத்தி இதற்குத் தேவையான பொருட்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து எதுவித தடையுமின்றி கொண்டு செல்லப்படுவதாகவும், இதில் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோமீற்றர் நீளமும்; 500 மீற்றர் அகலமும் உடைய இந்த ஓடுபாதை "ஏச்" வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 2 உலங்கு வானூர்தித் தரிப்பிடங்கள் உள்ளன.

இவற்றின் பாதுகாப்புக்கு பல பதுங்குகுழிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ் விமான ஓடுபாதையின் பாதுகாப்புக்கென நூறு தாக்குதல் உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ் விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ள பகுதி விடுதலைப் புலிகளின் (10 ஆம்பக்கம் பார்க்க)



நேற்று இடம்பெற்ற சூரிய கிரகணக் காட்சி

# ஜனாதிபதி சந்திரிகாவின் தூண்டுதலினால்

# ஐ.தே.கவை ஆதரிக்க இ.தொ.கா. முடிவு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான சந்திரிகா குமாரதுங்கவின் தூண்டுதலினாலும் பாரிய அழுத்தத்தினாலும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் முடிவெடுத்துள்ளதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.**

**ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவுடனேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் காய்நகர்த்தல் இடம்பெறுவதாகவும், அதனடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இ.தொ.கா. முடிவுசெய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் தமது பிரதிநிதிகளை ஈடுபடுத்த ஐரோப்பிய ஒன்றியம் தமது ஒப்புதலை வழங்கியுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஐரோப்பிய ஒன்றியம் முன்னர் இதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

முன்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறியதால்தான் ஐரோப்பிய ஒன்றியம் முன்னர் தயக்கம் காட்டியது என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிறிக்கோ தெரிவித்தார்.

தேர்தல் மோசடிகளைத் தடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முழு மூச்சில் ஈடுபடுமென அவர் கூறினார். (ச-4)

## கடற்புலிகள் நால்வர் திருமலையில் கைது!

(திருகோணமலை)

திருகோணமலையின் கடற்படைத் தளத்தைப் படம் பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் எனத் தெரிவிக்கப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரண்டு மணிநேரத்தினுள் யாழில் இருவர் சுட்டுக்கொலை!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 12 மணிநேரத்தினுள் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆறுகால்மடம் புதுறோட்டில் நேற்றுக்காலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். சுட்டுக்கொல்லப்பட்டவர் வரணியைச் சேர்ந்த, யாழ். O.L.R பாடசாலையின் ஆசிரியரும் ஈ.பி.டி.பி உறுப்பினருமான கிட்டின்ன் பரமேஸ்வரன் (வயது 42) என அடையா ளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக்காலை தனது மனைவியை பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது காலை 6.25 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதோர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரின் உடலில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. வரணியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், அண்மைக்காலமாக கொக்குவிலில் உள்ள அவரது வீட்டில் தங்கியிருந்ததாக அவரது சகோதரன் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத மண் அகழ்வு சாரதியுடன் டிரக்டர் தீக்கிரை

### வடமராட்சியில் சம்பவம்

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் சாரதியுடன் தீக்கிரையாக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வல்லிபுரத்திற்கும் மணல்காட்டிற்கும் இடைப்பட்ட வலிகண்டி எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சாரதியும் உழவு இயந்திரமும் முற்றாக எரிந்த நிலையில் காணப்பட்டது. இச்சம்பவத்தில் உழவு இயந்திர சாரதியான வரணியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைத்துறை மாணவன் கார்த்திகேசு செந்தூர்ச் செல்வன் (வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

உழவு இயந்திர சாரதி தாக்கப்பட்டதன் பின்னர் எரிக்கப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. சாரதியின் தலையில் பாரிய வெட்டுக்காயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகி றது. இதேவேளை அவரது தலையில் சூட்டுக்காயம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். உழவு இயந்திரம் பாழடைந்த கிணறு ஒன்றினுள் விழுந்த நிலையில் எரிக் கப்பட்டுள்ளது. (ச-101,35)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும்

⑦ அதேபோல், இது பரம்பரையாக வரும் நோய். ஆகவே பெற்றோருக்கு இந்த நோய் இருந்தால், தமது கண்ணை ஆறு மாதத்திற்கு ஒருமுறை பரிசோதித்தல் அவசியம்.

II சாதாரணமாக நடுத்தர வயதுடைய பெண்களுக்கே கூடுதலாக ஏற்படுகிறது. கண்ணில் பிரசர் இரவில் கூடுகின்றது. அதனால் இரவில் விளக்கை பார்க்கும் போது, அதைச் சுற்றி வானவில் வட்டம் போல் தெரியும். அந்த நேரத்தில் அந்தக் கண் பகுதியில் கடும் தலையிடி ஏற்படும். பார்வை ஒரேயடியாக இல்லாமல் போய்விடும். இது ஏற்படும்போது வாந்தி எடுக்கவும் நேரிடும்.

ஒரு தாய்:- *எனது மகள் என் தம்பியின் மகனை மணமுடிக்க விரும்புகிறாள். எங்கள் இரு குடும்பத்தினருக்கும் விருப்பம். ஆனால் இரத்த உறவினருக்கிடையில் திருமணம் நிகழ்வதன் மூலம் ஊனமுள்ள குழந்தைகள் பிறக்கலாம் என்று அண்மையில் ஒரு சஞ்சிகையில் படித்தேன். எங்கள் குடும்பத்தினருக்கோ மணம் செய்யப் போகும் பிள்ளைகளுக்கோ எத்தகைய நோய்களும் இல்லை. நாங்கள் அனைவரும் நல்ல உடல் நலமுடையவர்கள். அப்படியானால் குழந்தைகள் பாதிப்படையக் காரணம் உண்டா?*

மருத்துவா:- ஒரு தாயினதும், தந்தையினதும் உயிரணுக்கள் ஒன்று சேர்வதன் மூலமாகவே ஒரு குழந்தை உருவாகிறது. நம் அனைவரிடமும் வலிமையற்ற உயிரணுக்கள் இருப்பது போலவே நல்ல வலிமையுடைய உயிரணுக்களும உயிரணுக்கள் மூலமாக வலிமையற்ற உயிர

## கண் நோய்கள் பற்றிய கேள்வி-பதில்கள்

னுக்கள் மூடிமறைக்கப்படுவதால் சிலருடைய குறைபாடுகள வெளிப்படாமல் போகலாம். ஆயினும் நெருங்கிய உறவினருக்கிடையே திருமண சம்பந்தம ஏற்படும்போது இருவருக் கும் ஒரே விதமான உயிரணுக்கள் இருப்பதால் குழந்தை உருவாகும் போது பெற்றோரிட மிருந்து பெறும் வலிமையற்ற உயிரணுக்கள இரண்டு ஒன்று சேர்வதன் காரணமாக ஊனமுள்ள குழந்தைகள் கிடைக்க வாய்ப்பாகின்றது. அதாவது ஊமை, குருடு, செவிடு அல்லது மந்த புத்தியுள்ள குழந்தைகள் கிடைக்கலாம். சாதாரணமாக இவ்வகையான குழந்தைகள் கருச்சிதைவுக்கு ஆளாகலாம் அல்லது இறந்த நிலையில் பிறக்கலாம். ஆகவே இரத்த உறவுடைய இருவரும வேறுநபர்களுடன் திருமணம் செய்துகொண்டால் உயிரணுக்கள் வேறுபடுவதன் காரணமாய் வலிமையற்ற உயிரணுககள் வெளிப்பட வாய்ப்பில்லை. எனவே ஊனமுற்ற குழந்தைகள் பிறக்கவும் வாய்ப்பில்லை. அனேகமாக இரத்த உறவினருக்கிடையில நடைபெறும் திருமண சம்பந்தங்களின் மூலம் மூன்று அல்லது நான்கு குழந்தையாவது ஊனமாகப் பிறக்கக்கூடிய சாத்தியம் அதிகம். அதனால் தான் இரத்த உறவினருக்கி டையில் திருமணம் செய்து கொள்வது தவறானது எனப்படுகிறது.

ஒரு நோயாளி:- *எனது வயது 56. எனது கண்களிரண்டும் மண்*

**கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர் ரெஜி சீமன்**

*போட்டது போல் கூசுகின்றது. கண்ணைக் கசக்கிய பின்பு சுகமாயிருக்கும். காலையில் எழுந்தவும் கண்களைத் திறக்க கஷடமாயிருக்கும். விரல்களினால் தான் கண்ணைத் திறக்க லாம்.*

மருத்துவர்:- கண்ணில் கண்ணீர் உண்டாவது குறைவடைவதனாலே இப்படி ஏற்படுகின்றது. அப்பொழுது கண்ணீரில் இருக்கும் எண்ணெய்த் தன்மையும் குறைவடையும். அப்பொழுது கண் இமை கண் முழியில் படும் போது வழுக்கும் தன்மை இல்லாமையால், கூச்சம் ஏற்படுகின்றது. இந்த நோய் அதிகமாக மூட்டு உளைவு உள்ள நடுத்தர வயதுடைய பெண்களுக்கே ஏற்படுகின்றது. இதற்கு மருத்துவம் செய்ய வேண்டும்.

ஒரு நோயாளி:- *தறபோது எனது வயது 45. கடந்த இரண்டு மூன்று மாதங்களாக மதிய வேளையில் வெள்ளை நிற சுவர் அல்லது வானத்தில் முகிலைப் பார்க்கும் போது கண்ணில் பூஞ்சனம போல் கறுப்பு வட்டம தெரிகிறது. இரவில் அந்தக் கண் பகுதியில் மின்னுவது போல் வெளிச்சம் தெரிகின்றது. ஏன் இப்படி தெரிகின்றது,*

மருத்துவர்:- கண்ணிற்குள் முட்டை வெள்ளைக்கரு போன்ற சாறு இருக்கின்றது. அதில் ஒரு பகுதி கழன்று சிறிது முன்னுக்கு வருவதால் தான் இப்படி வருகின்றது. இது சாதாரணமாக 40-60வயதிற்கு இடைப்பட்ட பெண்களுக்கு ஏற்படுகின்றது.

(தொடரும்)


## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோணி பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவறறின் பாட்ஸ் கையடககமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல போன்றவை விஷேசமாக செய்யபபடும் .ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் மேல்மாடி. தொடர்பு சு.நாராயணசாமி. (9916)


## ஒப்பந்தத்தில் மறுசீரமைப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் மீளப் பரிசீலனை செய்யப்படும் பட்சத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அவசியம் என்று இலஙகைக்கான நோர்வே தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் முஸ்லிம் சமாதான செயலகத்தின் தலைவர் ஜாவித் யூசித் தெரிவித்துள்ளார்.

எதிர்காலததில் நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தேவையென அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் முஸ்லிம்களின் பிரசசினைகள் பற்றி கவனஞ் செலுத்தக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணஙகளில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடாபாக முஸ்லிம்களின் அனுபவங்களைக் கருத்திற்கொண்டு போர்நிறுத்த ஒப்பந்தத்தில் புதிய மறுசீரமைப்பு இடம் பெறவேண்டும் என்று அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-7)

## இராசிபலன்

**04.10.2005**
(புரட்டாதி 18 செவ்வாய்க்கிழமை)
பிரதமை பிற்பகல் 05.03 வரை
அத்தம் காலை 06.25 வரை
இராகுகாலம் 03.02-04.32 வரை
சுபநேரம் 10.32-12.02 வரை
நவராத்திரி விரதம் ஆரம்பம்

| | |
|---|---|
| மேடம் | பணவருவாய், சத்துரு ஜெயம் ,எடுத்தகாரியம் கைக்கூடும் ,பொருள் சேர்க்கை. |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய தாமதம் ,போசன சுகக்குறைவு. |
| மிதுனம் | தாய்வழி உறவு ,கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம் ,அற்பர் உறவு. |
| கடகம் | இனியஅனுபவம்,வாக்குமேன்மை, சகோதரர் உறவு , காரிய அனுகூலம். |
| சிங்கம் | மாதர் நட்பு, எடுத்த காரியம் தாமதமாகும், பொருள் விரயம் ,அமைதிக்குறைவு. |
| கன்னி | நண்பர்கள் உறவு ,ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், நல்ல முயற்சி. |
| துலாம் | உணர்ச்சிவசப்படல், பணவிரயம், மனக் குழப்பம், காரிய தாமதம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, பொருள்சேர்க்கை, காரிய அனுகூலம் , பெருமை அடைதல். |
| தனுசு | கடின உழைப்பு ,சுபநிகழ்ச்சி ,நண்பர்கள் சந்திப்பு , நல்ல செய்தி. |
| மகரம் | உடல் உழைப்பு, வீண்பயம், கட்டுப்பாடு, சரீரப் பிரயாசை. |
| கும்பம் | அமைதிக் குறைவு, வேலைச்சுமை, போசன சுகக் குறைவு, பண விரயம். |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, புதிய விடயம், போசன சுகம், காரிய நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## மெலிஞ்சைட்டிஸ் நோய்க்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை

மூன்று தாய்மார்களின் உயிரினை பலிகொண்ட மெலிஞ்சைட்டிஸ் நோய் பரவியமைக்கான காரணம் இதுவரை திட்டவட்டமாகக் கண்டுபிடிக்கப்படவில்லையென்று சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. ஒரு வகை பக்றீரியாவால் இந்த நோய் பரவியுள்ளதாகத் தெரிவக்கப்பட்ட போதிலும் பக்றீரியா ஏற்படுவதறகான காரணம் இதுவரை முழுமையாகக் கண்டுபிடிகக்கப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் பரிசோதனைகள் இடம் பெற்றுவருகின்றது. மெலிஞ்சைட்டிஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அடிப்படை விசாரணைகள் பூர்த்தியடைந்த போதிலும் மேலதிக விசாரணைகளை நடத்தவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை.

நோய் பரவுவதற்குக் காரணமாகவிருந்த ஊசிமருந்து ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சிறிஞ்சுகள் அனைத்தையும் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)


## இசை நடன டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தின் மறியல் போராட்டம்

### உறுதிமொழியையடுத்து இடைநிறுத்தப்பட்டது

ஆசிரிய நியமனம் கோரி இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் யாழ்.கல்வி வலயம் முன்பாக கடந்த 22ஆம் திகதி தொடக்கம் நடாத்திவந்த மறியல் போராட்டம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, பட்டதாரிப் பயிலுநர்களை ஆசிரிய சேவையில் உள்வாங்கும் போது அவர்களுடன் சேர்த்து இவர்களையும் ஒருமாத காலத்துக்கிடையில் உள்வாங்குவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியையடுத்து கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மேற்படி சங்கததின் தலைவரும் செயலாளரும் கையொப்பமிட்டு வலம்புரிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த செவ்வாய்க்கிழமை கல்வி வலயம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இயங்குவதையறிந்து மறியல் போராட்டம் நடத்தச் சென்ற சங்க உறுப்பினர்களுக்கும் வலய அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இவ்விடயத்தை கஜேந்திரன் எம்.பியிடம் முறையிட்டதையடுத்து அவர் தமிழீழ கல்விக் கழகத்துடன் தொடர்புகொண்டு தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் மகாசிவத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இதனையடுத்து சங்க உறுப்பினர்கள் சிலரும் தமிழீழ கல்விக்கழக உறுப்பினர்,மகாசிவம், கிருஷ்ண குமார் ஆகியோரும் கடந்த 28ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் நடாத்திய பேச்சுவார்த்தையையடுத்து மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மறியல் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது. (து)





க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில பாடத்தில் அதிவிசேட சித்தி (ஏ) பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான கு.நிருத்தன்; கே.தர்சனன் ஆகியோருக்கு கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியர் த.சிவபரஞ்சோதி அவர்கள் பரிசில் வழங்கி கௌரவிப்பதை படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## ராகங்கள்

ராகங்கள் "பாடப்பாட ராகம்" என்று ஒரு பழமொழி உண்டு. "பாடப்பாட வேகம்" என்று ஒரு புதுமொழி சொல்லலாம். அதா வது ஒருவர் பாடப் பாட இன்னொருவருக்கு ஓட வேண்டு மென்ற வேகம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அதுதான் பாடப்பாட வேகம்.

சங்கீதத்தில் 'சங்கதிகள்' உண்டு. சங்கீதத்தைப் பற்றிய சங்கதிகளும் நிறைய உண்டு.

ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரத்தில் எத்தனையோ ராகங்கள். எந்த ராகத்தை எப்போது பாட வேண்டும்? எந்தப் பாட்டை எந்த ராகத்தில்பாடவேண்டும என்று கூட சில வழிமுறைகளை வகுத்து வைத்திருககின்றனர்.

இடத்திற்குத் தகுந்த ராகம் உண்டு. செய்யுளுக்கு தகுந்த ராகம் உண்டு. குணத்திற்குத் தகுந்த ராகம் உண்டு. காலத்திற்கு தகுந்த ராகம் உண்டு.

இடத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா? அது ஐந்திணை ராகம் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற ஐந்து வகை நிலங்களுக்கும் பொருத்தமான பாடல் இருக்கிறது. குறிஞ்சி, பாலை, சாதாரி, செவ்வழி, மருதம் என்பவை அவை.

செய்யுளுக்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே அது என்ன தெரியுமா? வெண்பாவுக்கு சங்கராபரணம், ஆசிரியப் பாவுக்கு தோடி, கலிப்பாவுக்கு பந்துவராளி, கலித்து றைக்கு பைரவி, தமிழிசைக்கு தோடி, விருத்தப் பாவுக்கு கல்யாணி, காம்போதி, மத்தியமாவதி , உலாச் செய்யு ளுக்கு சௌராஷ்டிரம், பிள்ளைத்தமிழுக்கு கேதார கௌளம், பர ணிக்கு கண்டாரவம்.

குணத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே இரக்கத்திற்கு நீலாம்பரி, புன்னாகவராளி, ஆகரி, கண்டாரவம், பியாகடம்.

துக்கத்திற்கு இதே இரக்க ராகங்கள். அத் தோடு வராளியையும் சேர்த்துக் கொள்ளலாம். மகிழ்ச்சிக்கு காம்போதி, சாவேரி, தன்யாசி. யுத்தராகம் நாட்டை.

காலத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேனே வசந்தகால ராகங்கள்- வசந்தா, காம்போதி, சாவேரி, தன்யாசி. மாலை வேளை ராகம் கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி. சாம வேளை ராகம் ஆகரி.

விடியற்காலை ராகம் இந்தோளம், நாட்டை, பூபாளம் உச்சி வேளை ராகம் சாரங்கம,தேசாட்சரி. எல்லாக் காலத்திற்கும் பொதுவான ராகங்களும் உண்டு. அதாவது ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம்,பூபாளம் போன்றவை நீங்கலாக மற்றைய ராகங்கள் எல்லாக் காலத் திற்கும் பொருந்தும்.

இன்னொரு விஷயம்தெரியுமா? ராகங்களிலேயே ஆண்ராகம், பெண்ராகம் எல்லாம் உண்டு. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடெல்லாம் அவற்றிற்கில்லை.

உதாரணத்திற்கு பைரவியை எடுத்துக் கொள்ளுங்கள் இது ஆண்ராகம. தேவக்ரியை, மேகவி ரஞ்சி, குறிஞ்சி போன்றன பெண்ராகங்கள். இவை பைரவியின் மனைவிகள்.

இந்த ராகங்களுக்கு அதிதேவதை ஈசன். சீராகம் என்பது ஆண்ராகம். இந்தோளம், பல்லதி, சாவேரி போன்றவை அதன் மனை விகள். இவற்றிற்கு அதிதேவதை சரஸ்வதி. இப்படி நிறையத் தம்பதிகள் உள்ளனர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இசை நடன நாடகவிழா

(காரைநகர்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் இசை நடன நாடக விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சங்கானை பிரதேச செயலர் ஏ.மோகன்றாஸ், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், உடுவில் பிரதேச செயலர் சி.திவாகரன்,சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், யாழ்ப்பாணம்-நெடுந்தீவு பிரதேச செயலர் எம்.பற்றிக்டிறஞ்சன், காரைநகர்-ஊர்காவற்றுறை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன், மருதங்கேணி பிரதேச செயலர் ரீ.ஜெயசீலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன்,வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன்,கோப்பாய் பிரதேச செயலர் அ.சாந்தசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மங்கள விக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த கலைஞர்களின் பாரம்பரிய கலைகளான குழுநடனம், கரகாட்டம், ஒயிலாட்டம், கிராமியப் பாடல், குழு நடனம், நாட்டுக்கூத்து, நடனம், நாடகம், இசைநடனம் போன்ற கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (த-246)

# தர்மாசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குப் போட்டிப் பரீட்சை

நடைபெற இருக்கும் தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடையும் அனைவரும் நிரந்தர நியமனம் பெறுவர் என இந்துசமய கலாசார விவகார அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நாகராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற தர்மாசிரியர்களுக்கான இருநாள கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஒரு மனிதனை நல்ல பண்புகள் மிக்க மனிதனாக உருவாக்குபவர் ஆசிரியர். இதனால் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதனிலும் இந்து தர்மாசிரியர்கள் மிகவும் ஒழுக்கசீலர்களாக அர்ப்பணிப்புள்ளவர்களாக செயற்பட வேண்டும்.

இங்கு பயிற்சிக்கருத்தரங்கில் கலந்துகொண்டிருக்கும் தர்மாசிரியர்களுக்கு இந்து சமயத்தில் ஐந்து பிரிவுகளைக் கொண்ட பரீட்சையொன்று நடாத்தப்படவுள்ளது. இத் தேர்வில் ஒவ்வொரு பிரிவிலும் தலா நாற்பது புள்ளிகளுக்கு மேல் பெறும் தர்மாசிரியர்கள் அனைவரும் நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இதற்கான பாராளுமன்ற அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

இந்து சமயத்தில் பரந்த அறிவுள்ளவர்களாக, இதனைப் போதிக்கும் ஆசிரியர்கள் விளங்குதல் வேண்டும். அதனோடு மாணவர்களுக்கு நல்ல ஒழுக்கததையும் பழக்கங்களையும் ஊட்டுபவர்களாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

வைத்தியராயினும் பொறியியலாளராயினும் கணக்காளர்களாயினும அவர்கள் ஓர் ஆசிரியரிடமிருந்து கல்வியைப் பெறுவதன் மூலமே அவ்வாறான உயர்தானத்திற்கு வருகிறான். இதனால் ஆசிரியர்களுக்கு உயர் கௌரவம் வழங்கப்பட வேண்டும். ஆசிரியரை மதிக்காத எந்த மாணவனும் மாணவராக இருக்க அருகதை அற்றவனாவான் என்றாா.

இக கருத்தரங்கில் ஆசியுரையை வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி பொன்னம்பலமும், விரிவுரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரவுப் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், விரிவுரையாளர் சிவசாமி மற்றும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவனும்,பிரசாரகருமான எஸ்.பாலசண்முகம்,பிரசாரகர் கந்த சத்தியதாசன மற்றும் இந்துசமய விவகார அமைச்சின் யாழ்.அலுவலக திட்ட அலுவலா ஆகியோரும் நிகழ்த்தினர். இக் கருத்தரங்கில் நானூறுக்கும் மேற்பட்ட பெண்களும் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆண்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-74)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுபெறாமல் அபிவிருத்தியில் முன்னேற்றம் காணமுடியாது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சின்னக்கு நிரந்தர தீர்வு காணப்படாமல் நாட்டின் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்று அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை துடாவைப் பகுதியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவிததார். அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மனித அபிவிருத்தி விடயத்தில் நாடு உயரிய நிலையில் இருக்கின்றபோதும் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தியையும் மனித அபிவிருத்தியையும் சமாந்தரமாக மேம்படுத்தாமல் விட்டால் நெருக்கடிகள் பலவற்றை நாடு எதிர்நோக்க வேண்டிய நிலையேற்படும்.

தெற்காசிய நாடுகளில் மனித அபிவிருத்தி விடயத்தில் இலங்கை முதலிடத்திலிருக்கின்ற போதிலும் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு பின்னடைவான நிலையே காணப்படுகின்றது எனத் தெரிவித்தார். (த-8)

# பின்தங்கிய பாடசாலைகளுக்கு சூரியசக்தி மூலம் மின்சாரம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு சூரியசக்தி மூலம் மின்சாரத்தை வழங்க 'கார்ப்' திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற கொள்ளப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கென நிதி உதவியை வழங்கியுள்ளது. 102 பாடசாலைகளுக்கும் 26 பொது அமைப்புகளுக்கும் சூரியசக்தி மூலம் மின்சாரத்தை வழங்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

முல்லைத்தீவு, துணுக்காய்ப் பகுதிகளில் 22 பாடசாலைகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் 21 பாடசாலைகளுக்கும் வவுனியா மாவட்டத்தில் 14 பாடசாலைகளுக்கும் சூரியசக்தி மூலம் மின்சாரம் வழங்கப்படும்.

மட்டக்களப்பில் 15, அம்பாறையில் 30 பாடசாலைகள் சூரியசக்தி மூலம் மின்சாரத்தைப் பெறவுள்ளன. (த-7)

# விவசாயிகளின் நலன்களில் அக்கறை காட்டுகிறார் மஹிந்த

(கொழும்பு)

விவசாயத்துறையில் எந்த ஒரு பிரிவும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நெல் கொள்வனவு சபைக்குப் பதிலாக நெல் கொள்வனவு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளை அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் நெற் செய்கையில் இருந்து விவசாயிகளை படிப்படியாக அகற்றிவிடும் நோக்கம் அந்தக் கட்சிக்கு உள்ளமை தெரிய வந்துள்ளது.

இதன்மூலம், பாரம்பரிய கலாசாரத்திற்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்படும்.

இதற்குப் பதிலாக ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணணி அரசாங்கம் ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தை ஆரம்பித்ததோடு மக்களுக்கும் விவசாயத் துறைக்கும இடையிலான பாரம்பரிய உறவுகளையும் புதுப்பித்துள்ளது என்றார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிவகித்த காலத்தில் உடவளவ திட்டத்தின் மேற்குக் கரையோரப் பகுதி விற்பனைக்கு விடப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் பெறும் வட்டிவீதம் அதிகரிக்கப்படும் அதே சமயத்தில் கடன் தொகை மீது அவர்கள் செலுத்தும் வட்டிவீதம் குறைக்கப்படும் என்றும் பிரதமர் [illegible] தெரிவித்தார். [illegible]

சட்டவிரோதமாக

# இத்தாலி செல்ல முயன்ற 7 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை இத்தாலிக்குள் அனுப்பும் நடவடிக்கையில் தொடர்புபட்ட ஒருவரை புத்தளப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.


ஆட்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் முகவருக்கு ஆட்களை சேர்த்துக் கொடுக்கும் தரகராக செயற்பட்டு வந்த நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட நபருடன் படகுமூலம் இத்தாலிக்கு செல்ல இருந்த 7 பேரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவரும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறிப்பிட்ட 7 பேருக்கு மதுரங்குளிப்பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த சில நாட்களாக தங்கவைக்கப்பட்டிருந்ததாகவும் இத்தாலிக்கு செல்வதற்காக தலா ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் ரூபா வரை செலுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-8)





**சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் "சிசு உதான" சேமிப்பு அலகுத் திறப்புவிழாவில் இதன் பெயர்ப் பலகையை சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவபாலன் திரைநீக்கம் செய்து வைப்பதனையும், பிராந்திய முகாமையாளர் து.ரகு அதிக தொகையை வைப்புச் [illegible] பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும் [illegible] காணலாம்.**

(படங்கள்:- சாவ.நிரு

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

**கர்நாடக சங்கீதம்** நேரம் : 1 மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி. ப. விஜயகுமார்
யா/ இணுவில் இந்துக்கல்லூரி.

**பகுதி - I**

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

**01.** கீதம், வாத்தியம், நிருத்தியம் மூன்றும் சேர்ந்தது
(i)நடனம் (ii)ஓவியம் (iii)சங்கீதம் (iv)சிற்பம்

**02.** ஒழுங்கற்ற ஓசை
(i)நாதம் (ii)இரைச்சல் (iii)கானம் (iv)இசை

**03.** தமிழிசையில் சுருதிக்கு வழங்கப்படும் பெயர்
(i)அலகு (ii)மாதா (iii)கோவை (iv)பிதா

**04.** ஸரிகமபதநி என்பது
(i)அஷ்டகம் (ii)சோடசாங்கம் (iii)ஷடங்கம் (iv)ஸப்தகம்

**05.** ஸ்வரஸ்தானங்களின் எண்ணிக்கை
(i)12 (ii)16 (iii)36 (iv)7

**06.** நாதஸ்வரத்திற்குப் பக்க வாத்தியமாக வாசிக்கப்படுவது
(i)கஞ்சிரா (ii)உடுக்கு (iii)தவில் (iv)வயலின்

**07.** 'தெருவில் வாரானோ...' என்ற உருப்படி வகை
(i)கீதம் (ii)பதம் (iii)தில்லானா (iv)ஜாவளி

**08.** நவகோடி நாராயணன் என அழைக்கப்படுபவர்
(i)புரந்தரதாசர் (ii)பாபநாசம் சிவன்
(iii)கோபாலகிருஸ்ணர் (iv)அருணாசலக் கவிராஜர்

**09.** மேலத்தேய இசையில் ஆரம்பவரிசை பாடப்படும் ராகம்
(i)மோகனம் (ii)மாயாமாளவ கௌளை
(iii)தோடி (iv)சங்கராபரணம்

**10.** இந்துஸ்தானிய இசையில் மாயாமாளவகௌளை இராகத்திற்கு வழங்கப்படும் பெயர்
(i)பூர்வி தாட் (ii)பூப்
(iii)காபி (iv)பைரவதாட்

**11.** மந்தரதரரே என்ற கீதம் அமைந்துள்ள மொழி
(i)தமிழ் (ii)சமஸ்கிருதம் (iii)தெலுங்கு (iv)கன்னடம்

**12.** கரிகாம்போதி இராகத்தில் பாடப்படும் உருப்படி
(i)திருத்தாண்டகம் (ii)திருவாசகம்
(iii)திருவிசைப்பா (iv)புராணம்

**13.** கர்நாடகச் சங்கீதம் இந்துஸ்தானிய சங்கீதம் பிரிவுகள் பற்றிக் கூறும் நூல்
(i)சங்கீதரத்தினம் (ii)சங்கிரக சூடாமணி
(iii)சங்கீத சுதாகரம் (iv)சதுர்த்தண்டிப்பிரகாசிகை

**14.** பிலகரி இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரம்
(i)கைசிகிநிஷாதம் (ii)காகல நிஷாதம்
(iii)சுத்த தைவதம் (iv)சதுஸ்ருதிதைவதம்

**15.** பஜனைப் பத்ததியின் தந்தை என அழைக்கப்படுபவர்?
(i)ஆதியப்பையர் (ii)தாளம் பாக்கம் சின்னையா
(iii)அன்னமாச்சாரியார் (iv)அண்ணாமலைச் செட்டியார்

**16.** தாய் இராகத்தில் வரம் ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் இராகம்?
(i)பூர்வாங்கம் (ii)உத்தராங்கம்
(iii)பாஷாங்கம் (iv)உபாங்கம்

**17.** நாட்டியத்திற்கு உகந்த வர்ணம்?
(i)தானவர்ணம் (ii)பதவர்ணம்
(iii)அடதாளவர்ணம் (iv)ஜம்பை தாள வர்ணம்

**18.** கோபலகிருஸ்ணர் பெண்களுக்காக இயற்றிய பாடல்?
(i)காவடிச்சிந்து (ii)கோலாட்டம்
(iii)சிதம்பரக்கும்மி (iv)கரகம்

**19.** பாபாநாசம் சிவனின் இளைமைப் பெயர்?
(i)கிருஷ்ணா (ii)காமாட்சி
(iii)தாசர் (iv)இராமையா

**20.** தற்கால இராகங்களுக்கு ஆதி லட்சியமாக விளங்குவது?
(i)பண்கள் (ii)தாளங்கள் (iii)தாட் (iv)ஸ்கேல்

**21.** சாகித்தியம் பகவத ஸ்தோத்திரமாக விளங்கும் உருப்படி?
(i)தில்லானா (ii)ஜாவளி (iii)அஷ்டபதி (iv)கீதம்

**22.** தம்புராவில் நான்கு தந்திகளும் சுருதி சேர்க்கப்படும் ஸ்வரங்கள்?
(i)ஸப ஸப (ii)பஸ பஸ (iii)பஸஸஸ (iv)ஸபபஸ

**23.** 5வது சக்கரத்தின் நேர் பிரதிமத்திம சக்கரம்
(i)ருத்ர (ii)ஆதித்தய (iii)பிரஹ்ம (iv)திசி

**24.** தாளத்தில் இடம்பெறும் ஆறு அங்கங்களை அழைப்பது?
(i)திரியாங்கம் (ii)சோடசாங்கம்
(iii)ஷடங்கம் (iv)பதாகம்

**25.** தாளத்தின் உட்பிரிவு
(i)களை (ii)ஜதி (iii)லயம் (iv)ஜாதி

**26.** இரட்டைப் பெயருடன் விளங்கும் ஸ்வரஸ்தானம்
(i)சதுஸ்ருதி தைவதம் (ii)சுத்தரிஷபம்
(iii)அந்தரகாந்தாரம் (iv)சுத்த மத்திமம்

**27.** உடுக்கு ரூபத்தில் அமைந்த தாளக் கருவி
(i)திருச்சின்னம் (ii)எக்காளம்
(iii)தம்பட்டம் (iv)தவண்டை

**28.** 'அன்னமே' வர்ணத்தை இயற்றியவர்
(i)ஸ்ரீநிவாசன் (ii)டைகர் வரதாச்சாரியார்
(iii)பொன்னையாபிள்ளை (iv)சிங்காச்சாரியார்

**29.** சௌக்க காலக் கீர்த்தனை பாடும்போது போடப்பட வேண்டிய களைகளின் எண்ணிக்கை
(i)3 (ii)4 (iii)2 (iv)6

**30.** வயலின் வாத்தியத்தை கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தியவர்?
(i)பாலஸ்வாமி தீட்சிதர் (ii)முத்துஸ்வாமிதீட்சிதர்
(iii)பாரதி (iv)கம்பர்

**31.** பாண மா என அழைக்கப்படும் மேள இலக்கம்
(i)கரிகாம்போதி (ii)ஸரசாங்கி
(iii)சாருகேசி (iv)சங்கராபரணம்

**32.** முத்துஸ்வாமி தீட்சிதரின் கிருதிகள் பிரதிபலிக்கும் ரசம்?
(i)திராட்சை (ii)கதலி (iii)நாளிகேதர (iv)கப்பல்

**33.** இராக கதம்பம் என அழைக்கப்படும் உருப்படி
(i)இராகமாலிகை (ii)ஜதீஸ்வரம்
(iii)ஸ்வரஜதி (iv)மேல் ஸ்தாயி

**34.** சங்கீத லிபி முறையில் பாடல்கள் அச்சடிக்கப்பட்ட காலம்?
(i)14ஆம் நூற்றாண்டு (ii)16ஆம் நூற்றாண்டு
(iii)20ஆம் நூற்றாண்டு (iv)7ஆம் நூற்றாண்டு

**35.** எல்லாத் தேசங்களிலும் காணப்படும் இராகம்?
(i)கல்யாணி (ii)மோகனம்
(iii)கம்சத்வனி (iv)மத்தியமாவதி

**36.** பூத்தேன் தாயன என்ற தேவாரத்தின் பண்?
(i)பழம்தக்கராகம் (ii)பழம் பஞ்சுரம்
(iii)இந்தளம் (iv)காந்தாரம்

**37.** நாடோடி கானத்தினின்று வந்த புராதன தாளம்?
(i)சாபு தாளம் (ii)ஏகதாளம்
(iii)ரூபக தாளம் (iv)ஆதி தாளம்

**38.** அருணாசல கவிராஜர் இராம நாடகத்தை அரங்கேற்றிய இடம்?
(i)மதுரை (ii)சீர்காழி
(iii)திருக்கோலக்கா (iv)திருவரங்கம்

**39.** $|_7 \; |_7 \; 0 \; 0$ இக்குறியீட்டில் காணப்படும் அட்சரங்களின் எண்ணிக்கை?
(i)16 (ii)18 (iii)20 (iv)14

**40.** மேலத் தேய கீழத்தேய வாத்தியம்?
(i)தம்புரா (ii)வீணை (iii)கிற்றார் (iv)வயலின்

# தேர்தல் வன்செயல்கள் குறித்து இதுவரை 29 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கபட்ட பின்னர் தேர்தல்வன்செயல்கள் தொடர்பாக இது வரை 29 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில்பாரிய குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லையென்று தேர்தல் அலுவலக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்தார்.

இதுவரை கிடைத்துள்ள ஆரம்பத் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளைக் கட்சி அடிப்படையில் பிரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

எதிர்வரும் 7ஆம் திகதியின் பின்னரே அந்த நடவடிக்கை ஆரம்பிக்கவுள்ளது. கொழும்பு பிராந்தியத்திலேயே கூடுதலான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9,7)

**க.பொ.த (சா/ த) மாணவர்களே!**
**உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**

## முறிவு நெரிவு வைத்திய சேவை

(தென்மராட்சி)

சாவகச்சேரி வைத்தியசாலையில் முறிவு நெரிவு வைத்திய நிபுணர் டாக்டர் பஜாஜ் பிரதி செவ்வாய் தோறும் நோயாளரைப் பார்வையிடவுள்ளார்.

நோயாளர்கள் முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(து-108)

# வியத்தகு எண்ணெய் மருத்துவம்

இரண்டு தேக்கரண்டி அளவு நல்லெண்ணெயைக் கொண்டு மனித உடலைப் பலப்பல நோய்க் கொடுமைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள ஒரு மிக எளிதான, சரியான மருத்துவ முறை ஒன்றினை அநநாளைய சோவியத் டாக்டர் மெக்ராஷ் என பவர் அருங்கொடையாகத் தந்தருளியுள்ளார். இவரது இந்த எளிய பாதுகாப்பான மலிவான எண்ணெய்க் கொப்பளிப்பு (Oil Pulling) முறையினால் எண்ணற்ற பல நீண்ட நாட்பட்ட நோய்கள் குணமாகியதென்பது கண்டுவியப்பு தோனறுகிறது.

தென் இந்தியாவில் எண்ணெய் மருத்துவ முறைகளை விளக்கமாக விளம்பரம் செய்த பெருமை பெங்களூரைச் சேர்ந்த ஆந்திரர் க்னவல் தும்மல கோட்டீஸ்வரராவ் அவர்களையே சாரும். அவர்தம் துணைவியாருடன் கவனமிக்க ஆய்வு மனத்துடன் பயன்படுத்திப் பார்த்ததின் அவரை முப்பதாண்டுகளாக துன்புறுத்திய இரைப்பிருமல் (ஆஸ்துமா) இருபத்தைந்து ஆண்டுகளாக அவரது துணைவியாரை வேதனைப்படுத்திய வெரிகோஸ்வெயினஸ் ஆகியன முழுவதுமாக குணமடைநதது கண்டு விரிவான வகையில் ஆயில் புல்லிங் அனைவரையும் சென்றடைய எல்லா வகையான பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள்.

ஆந்திர ஜோதி ஞாயிறு மலர் வாயிலாக செய்திகளை வெளியிட்டு புத்தக வடிவில் கொண்டு வந்துள்ளார்கள் அவருக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி எண்ணெய் மருத்துவத்தினால் குணமான நோய்கள் பின்வருமாறு,

தும்மல், சளி, இருமல், ஆஸ்த்துமா, மூட்டுவலி, முதுகுவலி, பல் நோய்கள், பார்க் கின்சன் நோய்கள், கழுத்துப்பிடிப்பு, இதயநோய், வாய்ப்புண், கொப்புளங்கள், தலைவலி, காது நோய், வயிறு குடல் நோய்கள், மலச்சிக்கல், மூலம் இரத்த அழுத்தம், நீரிழிவு, கல்லீரல், நுரையீரல் நோய்கள், வலிப்பு, பக்கவாதம், நரம்பு நோய்கள், வெரிகோஸ் வெரியின்ஸ், கட்டிகள், வயிற்றுப்புண், தூக்கமின்மை, ஒழுங்கற்ற மாதவிடாய், பெண் நோய்கள், மார்பக, கருப்பை தொடர்பு நோய்கள், முகப்பரு, கீறல்கள், படை, எக்ஸிமா, செதில்படை, தோல் தொடர்பு நோய்கள் இன்னும் பலப்பல.

**ஆயில் புல்லிங் – எண்ணெய் கொப்பளிப்பு செய்வது எப்படி?**

அதிகாலை எழுந்தவுடன் காலி வயிற்றில் இரண்டு டீ ஸ்பூன் சூரிய காந்தி எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் அல்லது கடலை எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றினை (அவரவர் தேர்வு போல்) வாயில் விட்டுக் கொள்ளுங்கள். விழுங்கி விடாதீர்கள். மிகவும் சிரமப்படாமல், மெதுவாக அமைதியாக அதனை வாயில் சப்பியவாறு வாய் முழுவதும் கலந்து திரியும்படி கொப்பளியுங்கள். தொண்டைக்குள் செல்லாதவாறு, பற்களுக்கு இடையிலும் கொப்பளியுஙகள். ஆரம்பத்தில் வாய் முழுவதும் வழுவழு என்றிருந்த எண்ணெய் 15 முதல் 20 நிமிடங்கள் வரை கொப்பளித்தவுடன் வாயில் ஊறிய உமிழ் ந்ருடன் கலந்து, நுரைத்து, வெண்மையாக்கி, நீரத்துப்போகிறது. வெளளையாக மாறாமல் எண்ணெய் மஞ்சளாக வழுவழுப்பு குறையாமலிருந்தால் இனியும் சிறிது நேரம் கூடுதலாக்க கொப்பளிக்கவேண்டும்.

பின்னர் கொப்பளிப்பு செய்த ததை உமிழ்ந்து வெளியே துப்பி விடுங்கள். பிறகு வாயை நான்கு அல்லது ஐந்து முறை தூய நீரால் கழுவி கொப்பளித்து தூய்மை செய்ய வேண்டும். நீங்கள் உமிழ்ந்த நிர்மத்தில் கிருமிகள், கேடு விளைவிக்கும் பொருட்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டு விடுகின்றன. மாலையில் பகல் உணவு உண்டபிறகு நான்கு மணிநேரம் கழித்து ஒருமுறை ஆயில் புல்லிங் செய்யலாம்.

### உண்மையில் எப்படி வேலை செய்கிறது?

உடலை நோயத தொல்லைகட்கு ஆளாக்குவனவான நஞ்சு கலந்த வேதியியல் பொருட்கள், வீண்பட்ட பொருட்கள், நோய் உண்டுபண்ணும் நுண்ணுயிரிகள், வெவ்வேறு வகையான பாக்டீரியாவிற்கு வாய் மூலாதாரமாகவுள்ளது. எண்ணெய் கொப்பளிப்பு ,அக்கிருமிகளை அழித்து ஒடுக்கி மியூகஸ் மெம்பேர்ன வழியாக உடலிலுள்ள நச்சு கலந்த வேதியியல் பொருட்களை உறிஞ்சி வெளியே நெட்டித்தள்ளுகிறது. எண்ணெய் கொப்பளித்து வாயில் தயாரான நுரைத்த நீர்த்துப்போனதை உமிழந்து விடுவதன் மூலம் நாம் அவற்றை வெளியேற்றிவிடுகிறோம்.

இதனால் இரத்த நாளங்கள் சீரடைந்து இரத்த ஓட்டம் அனைத்து உடல் பாகங்களுக்கும் உயிரிப்பிக்கப்படுகின்றது. மெடபாலிசம் புத்துணர்வு பெறுகிறது. உடல் நாள்தோறும் நலத்துடன் மிளிர்கிறது. ஆயில் புல்லிங் வயது வரம்பின்றி ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் அனைவரும் செய்யலாம். உறுதியான மனமும், தவறாத கடைப்பிடிப்பும், நம்பிக்கையும் அவசியம் வேண்டும். நிச்சயம் பயன்பெறலாம்.

எனது நான்குமாத கால இனிய அனுபவங்கள் எண்ணெய கொப்பளிக்க ஆரம்பித்த 45 நாட்களில பலன்கள் லேசாகத் தெரிய ஆரம்பித்தன. தொடர்ந்து செய்து வருகிறேன். அதன் பலனாகத் தற்போது,

1.எனது நீண்ட நெடு நாளைய சளி, தொடர் தும்மல் அறவே அகன்றது. சளித்தொல்லை நீங்கியது.

2.மலச்சிக்கல் அகன்று சுகம் காணகிறேன்.

3.கண்ணாடி இன்றிப் படிக்குமளவு பார்வை தெளிவு பெற்றுள்ளது.

4.ஈறுகள் கெட்டிபட்டு, பற்கள் உறுதியாகி பல் கூச்சம் போய்விட்டது.

5.தலைமுடி உதிர்வது நின்றுவிடடது.

6.நீரிழிவுநோய் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது.

7.பகலிலோ இரவிலோ படுக்கையில் படுத்த பத்தே நிமிடங்களில நிம்மதியான தூக்கம் வந்து விடுகின்றது.

**கோ. கிருஷ்ணமூர்த்தி**

8.முகம் பொலிவு பெற்றுள்ளதுடன் உடல் நாள் முழுவதும் சோர்வு சோமபலின்றி புத்துணர்ச்சியுடன் உள்ளது.

9.முதுகுவலி மூட்டுவலி ஏற்படுவதில்லை.

10.இரத்த அழுத்தம் சீராக உள்ளது.

11.காலில் பாத பித்தவெடிப்புகள வலி குறைந்துவிட்டன.

12.என்நண்பருக்கு நீண்ட நாட்களாக உடல் முழுவதும் இருந்து வந்த அரிப்பு உபாதை 40 நாள் எண்ணெய் கொப்பளிப்பு தொடாந்து செய்துவருவதால் வெகுவாகக் குறைத்துக் குணமடைந்து வருகிறார்.

நீங்களும் முயன்று பாருங்கள் அவர் அவர்களின் தேவைக்கேற்ப எண்ணற்ற நற்பலன்கள் பலவும் பெறுவீர்கள். இவ்வாறு தெரிவிக்கிறாா இச் சிகிச்சை முறையால் பயனடைந்த ஒருவர். □

## சிட்னியில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வு








ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தின் முக்கிய திருப்புமுனைகளில் ஒன்றாக அமைந்தது ஜூலை மாதம் வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் பிரகடனமாகும்.

தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் அந்நிய சிங்களப் படைகள் எம் மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்றும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுத்தும் வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்க அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்றுமுன தினம் மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

இதில் ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் உணர்ச்சி பொங்கக் கலந்துகொண்டனா.

அகவணக்கத்தைத் தொடர்ந்து பொதுச் சுடரை சிட்னியில் உள்ள முப்பதிற்கும் மேற்பட்ட சமய, சமூக, கல்வி, விளையாட்டுச் சங்கங்களின பிரதிநிதிகள் ஏற்றிவைத்தனர்.

தென்துருவ தமிழச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அ.பரராஜசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த ஒன்று கூடலில் வவுனியாப் பிரகடனத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்து அவுஸ்திரேலிய அரசின் ஆதரவை வேண்டி நிற்கும் அறிக்கையை, சிட்னி தமிழ் அறிவகத்தின் தலைவர் கருணாகரன் வாசித்தார். மண்டபம் அதிரும் வகையில்,. திரண்டு இருந்த மக்கள் கை தட்டி வரவேற்றனர்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச மன்னிபபுச் சபையின் தலைவர், கிறஸ்தவ சபையின் தலைவர்கள், மாநகர சபை முதல்வர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் யோன். மேர்.்.பி தனது செய்தியில்,

தமிழரின் தாயகத்தை ஆக்கிரதமித்து நிற்கும் சிங்கள இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கேடடுக்கொண்டார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின தலைவரான யோன் டௌம்ட் அங்கு உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தர்.

நியூ சவுத் வேல்ஸ் மாநில முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியை கலாநிதி விக்டர் இராஜகுலேந்திரன் வாசித்தளித்தார்.

இலங்கை அரசு யுத்ததை மறந்து தமிழ் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தர்வு காணவேண்டும எனப் பலரும் வலியறத்தினர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னிப் பணியக அரசியல் பரப்புரைப் பொறுப்பாளர் மயில்வாகனம் தனபாலசிங்கம், இன்பத் தமிழ ஒலி 24 மணிநேர தமிழ் வானொலி இயக்குனர் பாலசிங்கம் பிரபாகரன் அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தபான அறிவிப்பாள் சௌந்தரி சிவாநந்தன ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

வவுனியாப் பிரகடனம் அதன் முக்கியத்துவம், அதன பின்னால் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் அணிதிரள வேண்டியதன் அவசியம் ஆகியவை அனைவரது பேச்சுகளிலும் இடம் பெற்றிருந்தன.

## பேத்தியைப் பெற்றெடுத்த பாட்டி!

(இலண்டன்)

குழந்தை பெற முடியாத மகளுக்கு, பெற்ற தாயே வாடகைத் தாயாகி குழந்தை பெற்றுத் தந்துள்ள விசித்திர பாசக் கதை இலண்டனில் நடந்துள்ளது.

சினிமாக்காரர்களுக்கு இதோ் ஒரு புதிய கதை கிடைத்திருக்கிறது. திரைக்கதை எழுதிப் படம் எடுக்க உதவும் இந்தக் கதை பற்றிய விபரம் வருமாறு,

இலண்டனைச் சேர்ந்த இளம் பெண் எம்மா ஹாட்டர்லே. அவரது கணவர் ஆண்ட்ரு. திருமணமாகி சில வருடங்களுக்குப் பிறகு குழந்தை பெற முடிவு செய்தனர். டாக்டரிடம் சென்று ஆலோசனை கேட்டனர்.

எம்மாவை பரிசோதித்த டாக்டர், அவரது இதயம், நுரையீரல்கள் மிகப் பலவனமாக இருப்பதாகவும, கருவுற்றால் குழநதை மற்றும் தாய் இருவரும் பலியாக நேரலாம் என்று எச்சரித்தார்.

அதிர்ச்சியடைந்த தம்பதியினர் மனதைத் தேற்றிக் கொண்டு வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற முடிவு செய்தனா. வெளியார் மூலம் வாடகைக்குக் குழந்தை பெற எம்மா விரும்பவில்லை.

மாறாக, தனது அம்மாவைப் பார்த்தார். 'ஏன் எனது குழந்தையை நீ சுமந்து பெற்றுத் தரக்கூடாது' என்று கேட்டார். முதலில் அதிர்ந்தாலும பிறகு் மூவரும் விரிவான ஆலோசனை நடத்தினர். மகளுக்குக குழந்தை பெற்றுத்தர தாய் அன்னி சம்மதித்தார்.

இதையடுத்து மகளின் கரு முட்டை, மருமகனின் உயிரணு மூலம் உருவாக்கப்பட்ட கருவை தாயான அன்னி தனது கருப்பையில் ஏற்றுக கொண்டார். 53 வயதான அந்தப பாசத்தாய்க்கு சிசேரியன் ஆபரேஷன மூலம் சமீபத்தில் பெண் குழந்தை பிறந்தது.

'தாயும் சேயும் நலம்..' சாரி 'பாட்டியும் பேத்தியும் நலம்' என்று டாக்டர்கள் கூறினர்.

இந்த அதிசய பிரசவம் பற்றி குழந்தையின் தாய் எம்மா கூறுகையில்,

"முகம் தெரியாத ஏதோ ஒரு பெண் மூலம் வாடகைக்குக் குழந்தை பெற நான் விரும்பவில்லை. நம்பிக்கையான, நெருக்கமான பாசமான உறவினர் மூலம் பெற விரும்பினேன.

அதற்கு என் தாயைப் போல யாரும் ஈடாகவில்லை. தாய் மூலம் என் குழந்தை பிறந்த அந்த நிமிடத்தில் கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை" என்றார். (ற)

## புதிய பணிமனை திறந்துவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன் கழகத்திற்கான புதிய பணிமனை கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

மாவட்ட கவர்னர் லயன் சரத் குணசேகர பெயர்ப் பலகையினைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இதன்போது வறிய மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட்டது. (த-108)

## நவராத்திரி விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா இன்று ஆரம்பமாகி 8 தினங்கள் தொடர்ந்து நடைபெற்று மானம்பு விழாவுடன் பூர்த்தி பெறுகிறது.

12ஆம் திகதி முப 10.00 மணிக்கு ஏடு தொடக்கும் வைபவம் இடம் பெறவுள்ளது. (த-7)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சித்தமருத்துவ விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம திகதி பி.ப 2.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சித்த மருததுவப் பிரிவில் பேராசியர் சு.பவானியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது யாப்பு சமர்ப்பித்தல், செயற்குழு உறுப்பினர் ஒருவரைத் தெரிதல் என்பன இடம்பெறவுள்ளன. (த-7)

## வீதிப் பெயர்ப் பலகை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட ஏ-9 வீதியில் நுணாவில் முதல் மீசாலை வரையான பகுதியில் எஸ்லோன் பைப் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த சனிக்கிழமை வீதிப் பெயர்பலகை நாடடப்பட்டன. (த-108)

சுனாமியால் பாதிக்கப்பட்ட

# வட – கிழக்கு தாதியர்களுக்கு 42 இலட்சம் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக வீடுவாசல்களையும் தமது உடமைகளையும இழந்த தாதி உத்தியோகத்தர்களுக்கு உதவுகின்ற பொருட்டு வெளிநாடுகளில் இருக்கின்ற தாதி உத்தியோகத்தர்கள சங்கங்கள் மூலம் பெறப்பட்ட 68 இலட்ச ரூபா நிதியில் 42 இலட்சம் ரூபாவை வடக்கு - கிழக்கில் இருக்கின்ற அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்ற ஆழிப் போரலையினால் பாதிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தினால் பாதிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் இழப்புகளுக்கேற்ப காசோலைகளை வழங்கும் நிகழ்வு மருதமுனை வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ற-7)

# பயிற்சி நெறியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்துக்கலாசாரத் திணைக்களத்தினால் நடாததப்படும் இந்து தர்மாசிரியர் பயிற்சி நெறியும், கருத்தரங்கும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற இந் நிகழ்வு பேராசிரியர் சிவசாமி தலைமையிலும், கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் தலைமையிலும நிகழ்ந்தது. விரிவுரைகளை பேராசிரியர் வி.கோபால கிருஷ்ண ஐயர், கந்த சத்தியதாசன் ஆசிரியர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்துக்கலாசார அமைச்சின் இணைப்பாளர் க.நாகராஜா அபிவிருத்தி உதவியாளர் பிரகதீஸ்வரன ஆகியோர் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர். (த-124)

# சிறந்த அதிபராக தெரிவு



(அல்லைப்பிட்டி)

கோண்டாவில் பரஞ்சொதி வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார் 2004ஆம் ஆண்டில் வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தேர்வின் அடிப்படையில் சிறந்த அதிபராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உலக ஆசிரியர் தினமான எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதியன்று திருகோணமலையில் இவர் கௌரவிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-98)


# 91 பொலிஸ் அதிகாரிகளை இடைநீக்குவதற்கு பரிந்துரை

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் 91 பேரை இடைநீக்கம் செய்யுமாறு பொலிஸ் சேவை ஆணைக குழு பரிந்துரைத்துள்ளது.

விசாரணைக் கைதிகளைச் சித்திரவதை செய்ததாக வந்த புகார்களையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு இப்பரிந்துரை அனுப்பி வைக்கபபட்டுள்ளது.

புகார் கூறப்பட்ட 15 பொலிஸ அதிகாரிகள் நாட்டை விட்டு ஓடிவிட்டனர் என்றும் ஆணையம் கூறியுள்ளது. இதனிடையே தொலைக்காட்சி ஒன்றில் பேசிய பொலிஸ் மா அதிபா சந்திரா பெர்னாண்டோ, பொலிஸ் அதிகாரிகளைப் பெரும் எண்ணிக்கையில் இடைநீக்கம் செய்வதால் குற்றச் செயல்களைத் தடுப்பதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்ள வேணடியிருப்பதாகக கூறியுள்ளார். (ற)



(வல்வெட்டித்துறை) சுமார் 30 வருடகாலமாக புனரமைக்கப்படாத நெற்கொழு வீதியையும் தற்போது கல் அகழப்படுவதையும் படங்களில் காணலாம்.



இது குறித்து பல பொது அமைப்புக்கள் உரிய தரப்பிடம் பல தடவைகள் முறையீடு செய்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# உணவு முத்திரை விநியோகம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுககு வழங்கப்படுகின்ற உணவு முத்திரை விநியோகத்தை இந்த ஆண்டு டிசம்பர் மாதம 31ஆம் திகதி வரை நீடிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புனர்நிர்மாண புனரமைப்பு அமைச்சின செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க இதன் மூலம் 7 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடைய இருப்பதாக கூறினார்.

முன்னர் இந்த உணவு முத்திரைகள் இந்த மாதம் வரையே வழங்கப்படுவதற்கு திட்டமிடப்படடிருந்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கென்று உலக உணவுத் திட்டம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை கொள்வனவு செய்து வருகின்றது.

இதற்கமைய இந்த ஆண்டு 18ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-7)

# நவராத்திரிப் பாமாலை



## இன்று முதலாம் நாள்

### பாதம் பணிவோம்

நலம் தரும் நாயகியாம் துர்க்கை பாதம் பணிவோம்
நாடும் வரமருளும் நாயகியை வேண்டிடுவோம்
பலம் தருவாள் பாவங்கள் போக்கிடுவாள்
பணியும் அன்பர் வாழ்வுக்கு துணையிருப்பாள்
குலம் வாழ குடியிருக்கும் பகை விலத்தி
குறைவில்லா வாழ்வருளும் நாயகியை போற்றிடுவோம்
தலமெல்லாம் அவளை கொலுவிருத்தி பணிந்திடுவோம்
தளர்வில்லா நெறிதந்து தமிழ் வாழ்வை சேர்த்திடுவாள்.

மதுரகவி

### அருள் புரிய வாராய் தேவி

துதித்திடுவோம் துர்க்கா நின் துணைப் பாதங்கள்
துணைகொண்டு பகையழிக்க, அருள வாராய்
வீரத்தின் வினை நிலமாய் விளங்கும் தாயே!
வரமளிப்பாய் எம் வாழ்வு சிறக்க நன்கு

வீரத்தின் விளைநிலமே வேண்டு கின்றோம்
வீணர்களின் சூதுகளைத் துகளதாக்கி
காலத்தால் தமிழ் வாழ்வு சிறந்து நிற்க
கடைக் கண்ணால் அருள் புரிய வாராய் தேவி!

சு.தர்சிகா

### துர்க்கையம்மா!

வீரத்தைத் தந்திடுவாய் துர்க்கையம்மா
விரோதம் ஒழித்துவிடு துர்க்கையம்மா
நித்தம் உனை வணங்கிடுவோம் துர்க்கையம்மா
நிறைவுடனே அருள்புரிவாய் துர்க்கையம்மா

தன்மானத் தமிழர்களாய் வாழ்ந்த நாங்கள்
தலைகுனியும் அடிமைகளாய் மாறிவிட்டோம்
எம் மானம் தழைத்தோங்கத் துர்க்கையம்மா
இறையருளைத் தந்திடுவாய் துர்க்கையம்மா.

அ.மதிவதனன்,
யா/ஏழாலை ம.வி

# தேர்தல் வன்முறைகள்; 27 முறைப்பாடுகள் பதிவு

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரை 27 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி காமினி நவரண்ட இது குறித்துக் கூறுகையில்,

சுவரொட்டி ஒட்டுதல் மற்றும் பிரசார மேடைகள் அமைத்தல் ஆகியவற்றின்போது இத்தகைய வன்முறைகள் நடந்துள்ளன.

மரவிலவில் நடந்த ஒரு மோதலில் சுதந்திரக் கட்சியினரின் தாக்குதலுக்குள்ளாகி ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றனர். (ற்)

# பொலித்தீன் பாவனையைக்கட்டுப்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு

(சாவகச்சேரி)

இப் பிரதேச சுற்றுச் சூழல் சுகாதாரத்தினைப் பாதுகாத்தும், அது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டும் எதிர்வரும் 7ஆம் திகதி சூழல் பாதுகாப்பு முன்னோடி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சூழல் பாதுகாப்பின் பிரதம பங்காளிகளாக செயல்படவுள்ளன.

சூழல் பாதுகாப்பு தொடர்பில் மிகத் திறமையாக செயற்படும் சபைகள், செயலகங்களிற்கு விருதுகள், சான்றிதள்களும் வழங்கிக்கௌரவிக்கப்படவுள்ளதாக கடந்த செவ்வாய்கிழமை பளையில் அமைந்துள்ள தாயக சூழல் பாதுகாப்பு ஆணையகத்தால் நடாத்தப்பட்ட திணைக்கள செயலாளர்களுக்கான கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல், டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துக் காணப்படுவது தொடர்பாக சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள், திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதில் பாதுகாப்பான முறையினை கையாழுதல் போன்ற விடயங்கள் பற்றியும் இக்கலந்துரையாடலில் பேசப்பட்டது.

குடாநாட்டில் பொது மலசல கூட பராமரிப்பு பற்றிய விடயத்தில் அவை ஒரு வீட்டை விடச் சுத்தமான நிலையில் பேணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் குடாநாட்டில் பொலித்தீன் பாவனையினைக் கட்டுப்படுத்தி சூழல் பாதுகாபபில உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச செயலகங்கள் திறமையான முறையில் செயல்பட வேண்டும் எனத் தெரிவிககப்பட்டது. (து-21)

# சச்சின்

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

அவர்கள் இருவரையும் பார்த்தவுடன் அஜித் டெண்டுல் கரை அடையாளம் கண்டுகொண்டார் அச்ரேகர். அண்ணனோடு வந்திருந்த சிறுவன் சச்சினை எடைபோடுவது போல் மேலும் கீழும் பார்த்தவர், 'லேட் ஆயிடுச்சு, இன்னிக்கு எல்லோரும் விளையாடறதைப் பார்க்கட்டும்; நாளைக்கு இவன் விளை யாடலாம்' என்றார்.

சச்சினுக்கு ஏமாற்றம் தான். ஆனாலும் வேறுவழி இல்லாமல், கையைக் கட்டிக்கொண்டு ஓரமாக அண்ணனோடு நிற்க வேண்டியதாயிறறு. மைதானத்தினுள் உற்சாகமாகத் துள்ளி விளை யாடுகிற பையன்களைப் பார்க்கும் போது அவனுக்கு ரொம்பவே பொறாமையாக இருந்தது!

மறுநாள் சச்சினும் அண்ணனும் மீண்டும் சிவாஜி பார்க் வந் தார்கள். அச்ரேகர், சச்சினுக்கு ஏதும் புதிதாகச் சொல்லித் தரும் முன், அவன் தற்போதைக்கு எப்படி விளையாடுகிறான் என்பதைப் பார்க்க விரும்பினார். அதன்மூலம் ஒரு பையனின் இப்போதைய, வருங்காலத்தில் சாத்தியமுள்ள திறமைகளை யெல்லாம் அவரது அனுபவம் கச்சிதமாக எடை போட்டு விடும்!

'சில பையன்களைத் தீவிர கிரிக்கெற்றுக்குத் தயார் செய்ய முடியும். உன் தம்பி அதற்குச் சரிப்படமாட்டான் என்று எனக் குத் தோன்றிவிட்டால், நான் அதை வெளிப்படையாகச் சொல்லி விடுவேன். நீங்கள் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அவரது நேரடியான பேச்சு அஜித் டெண்டுல்கருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. 'கவலைப்படாதீர்கள் ஸார், என் தம்பி உங்களைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு நன்றாகவே விளையாடுவான்' என்று நம்பிக்கையோடு சொன்னார் அவர்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சச்சினுக்கு உள் ளுக்குள் கலவரமாகிவிட்டது. அண்ணனின் நம்பிக்கையை



யும், அச்ரேகர் ஸாரின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு விளையாட வேண் டுமே. தன்னால் முடியுமா என்றெல்லாம் கவலைப் பட ஆரம்பித்தான் அவன். அது மட்டுமல்லாமல் கடினமான கார்க் பந்தில் அவன் விளையாடுவது அதுதான் முதல் முறை.

இந்த டென்ஷன்களாலேயே அவனால் அன்றைக்குச் சரியாக விளையாட முடிய வில்லை. பதற்றத்தில் அவன் தொட்ட பந்துகள் எல்லாம் வானத்தில் பறந்து லட்டுலட்டாக கேட்ச் ஆகின. கிட்டத்தட்ட அரைமணி நேர பிராக் டிஸுக்குப் பின்னர், அச்ரேகர் பெரிதாகத் தலை அசைத்து உதட் டைப் பிதுக்கினதுதான் மிச்சம். அவருக்கு சுத்தமாகத் திருப் தியில்லை என்பது அவர் பேசும் முன்பே தெரிந்துவிட்டது!

அஜித் டெண்டுல்கருக்கும், தன் தம்பி இன்றைக்குச் சரியாக விளையாடாததற்கான காரணம் புரியவில்லைதான். ஆனால் அவருக்கு சச்சின் மேல் இருந்த நம்பிக்கை கொஞ்சமும் குறை யவில்லை. அவனுக்கு இன்னும் ஒரே ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்க்குமாறு அச்ரேகர் சாரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

இந்த 'இன்று போய் நாளை வா' சமாசாரமெல்லாம் அச்ரே கருக்குப் பழக்கமில்லை. ஆனாலும், சுபாவத்திலேயே பிடிவாதக் காரரான அஜித் டெண்டுல்கர், தன் தம்பியின் திறமையைப் பற்றி திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னதில் அவரது மனம் கொஞ்சம் இளகியது. 'சரி, நாளைக்கு இன்னொருமுறை ஆடட் டும், பார்க்கிறேன்' என்று அவர் அரை மனதாகச் சொன்ன பிறகுதான் அஜித் டெண்டுல்கரின் முகத்தில் சிரிப்பு திரும்பியது. அழுகைக்குத் தயாராகியிருந்த சச்சினுக்கும் ஓரளவு நிம்மதி!

மறுநாள், மீண்டும் அச்ரேகர் முன்னிலையில் சச்சின் ஆடி யதைப் பார்த்தவர்கள் பாக்கியசாலிகள். முந்தைய தினம் இருந்த குழப்பம், கவலை, பதற்றம் எல்லாவற்றையும் இராத் திரி இருட்டில் கரைத்துவிட்டவன்போல், தன்னம்பிக்கையோடு அபாரமாக விளையாடினான் சச்சின். பிசிறில்லாத, கச்சித மான, இயற்கையான அவனது ஆட்டத்தைப் பார்த்த பிறகு தான், இந்தப் பையனிடம் ஒரு பொறி இருக்கிறது, அதைப் பக்குவமாகப் பாதுகாத்து, ஊதிவிட்டால் அக்கினிக் குஞ் சாக ஜொலிப்பான் என்ற நம்பிக்கை அச்ரேகருக்குள் எழுந் தது. சச்சினைத் தம் சிஷ்யனாகச் சேர்த்துக்கொள்ள சம் மதித்தார்.

அவர் சொன்னதைக்கேட்ட போது சச்சினை விட அதிகம் சந்தோஷப்பட்ட ஒருவர் உண்டென்றால், அது அவரது அண்ணன் தான். ஆசைப்பட்டபடி நகரத்தின் முக்கியமான, கண்டிப்புக்கும் ஆட்ட ஒழுங்குக்கும் பிரசித்தமான பயிற்சியாளர் அச்ரேகரிடம் சச்சினைச் சேர்த்துவிட்டார் அவர். சரியான கைகளில் தான் தம்பியை ஒப்படைத்திருக்கிறோம் என்ற திருப்தி அவரை ஆனந்தத் தாலாட்டியது.

அன்றுமுதல் சச்சின் தினந்தோறும் சிவாஜி பார்க் வரஆரம் பித்தான். ஏற்கனவே நன்றாக விளையாடிப் பழகியிருந்த சச் சினுக்கு, பேட்டை எப்படி சரியாகப் பிடித்துக்கொள்வது என்ப தில் தொடங்கி அரிச்சுவடி விஷயங்களை முறையாகச் சொல்லித் தந்தார் அச்ரேகர். அடிப்படையை ஒழுங்காகக் கற்றுக்கொண் டால்தான் அதைச் சரியானபடி பயன்படுத்தி மேலும் முன்னேற முடியும் என்பது அவரது அழுத்தமான நம்பிக்கை. (தொடரும்)

# பொங்குதமிழ் சாதனையாளர்களுக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

வார்த்தைகளால் வர்ணிக்கமுடி யாத ஒரு பெரும் எழுச்சியாக பொங்கு தமிழ் 2005ஐ நடாத்தி முடித்துள ளோம். தமிழர்களின் உரிமைக்குரல் உலகமெங்கும் ஒலிக்கும் வகை யில் இந்த எழுச்சி நடந்து முடிந் துள்ளமை பேருவகையைத் தருகின றது.

இது தமிழ் மக்களின் ஓர் அசுரத் தனமான முயற்சி. வனமுறை அற்ற வழியில் தமிழர் உரிமையோடு கூடிய சமாதானத்தை இலங்கைத் தீவில் அடைவதற்காய் தமிழ் மக்கள் தாமே முன்வந்து ஒருபெரும் முன்னெடுப்பை செய்துள்ளார்கள். இதனை சர்வ தேச சமூகம் புரிந்துகொள்ள வேண் டும்.

இதில் பெண்களின் பங்கு குறிப் பிடத்தக்கதாக இருக்கின்றது. கிரா மங்கள் தோறும் கிளர்ந்தெழுந்த பெண் செயலாளிகள் கடந்த 18ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலா சபதி அரங்கை நிறைத்து உழைப் பதற்கு உறுதிபூண்டு, கிராமங்கள் தோறும் ஏனைய பெண்களுடன் ஊடாடி பொங்குதமிழ் 2005ற்காய் வேலை செய்தார்கள். அதுமட்டுமல்ல பொங்கு தமிழ் நிகழ்வில் 100பெண்கள எழுச்சி அரங்கை நடத்தி இலட்சக் கணக்கான மக்களை எழுச்சிப்படுத் தினார்கள். ஒரு பெரும் சக்தியாக் கினார்கள்.

சக்தி நிறைந்த மக்கள் சர்வ தேசத்திற்கு தமிழர் உரிமைக்குரலை அதிர வைத்தார்கள். ஆக்கிரமிப் பாளர்களின் அச்சுறுத்தல் இருந்த போதும் இந்தப் பெரும்பணி நடந்து முடிந்துள்ளது. நாங்கள் அனைவ ரும் ஒன்றுசேர்ந்து இந்தப் பெரும் பணியை சாதித்ததிற்காக ஒருவ ருக்கொருவர் நன்றி தெரிவித்து மகிழ்ச்சி அனுபவத்தை பகிர்ந்து கொள்வோம் எனப் பாராளுமன்ற உறுப பினர் திருமதி பத்மினி சிதம்பர நாதன் வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# வடமராட்சியில் இந்திய மீனவரின் அத்துமீறல்கள் தொடர்கின்றன

## கடற்றொழிலாளர் சமாசம் கடும் ஆட்சேபம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கடற்பரப்பில் இந் திய மீனவர்களின் அத்துமீறல் நட வடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு வடமராட்சி கிழக்கு கடற் றொழிலாளர் சங்கங்கள் கடும ஆட் சேபம் தெரிவித்துள்ளன.

வடமராட்சி கிழக்கில் வாழும் மக்களில் 90வீதமானோர் கடற் தொழிலையே நம்பியுள்ளனர்.

இந்த நிலையில்,இந்திய மீன வர்கள் திட்டமிட்டு இலங்கைக் கடற படையின உதவியுடன் இழுவைப் படகுகள் மூலம் அத்துமீறல் நடவடிக் கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி கனிய வளங்களை இந்திய மீனவர்கள் தொடர்ந்து அழித் துக் கொண்டிருபபதை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்கங் களின் சமாசப் பிரதிநிதிகள் கடுமை யாகக கண்டித்துள்ளனர். (ந-23)

# சேதுசமுத்திரப் பணிகள் 2007 இறுதியில் முடிவடையும்

(தூத்துக்குடி)

சேதுகால்வாய் திட்டப் பணிகள 2007 டிசம்பருக்குள் முடிந்து 2008 ஜனவரி முதலாம் திகதி காலவாய் வழியாக முதல் கப்பல் செல்லுமென சேதுசமுத்திர கார்ப்பரேஷன் தலைவா ரகுபதி தெரிவித்தா.

தூத்துக்குடி முறைமுக சபைத் தலைவர் ரகுபதி, சேதுசமுத்திர கார்ப் பரேஷன் லிமிடெட் தலைவராகவும் உள்ளார். அவர் தூததுக்குடியில் நிருபர்களிடம் கூறியதாவது,

சேதுகால்வாய் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலுள்ளதால், திட்டத்தால் மீனவர்கள் பாதிக்கப் படுவர் என்ற முதல்வர் ஜெயாவின் கருத்துக்கு என்னால் பதிலளிக்க இயலாது. சேதுகால்வாய பணிக் கான திட்டகாலம் 180 வாரங்கள். மத் திய அரசின் திட்டப்படி 2008 நவம் பரில் பணிகள் முடியவேண்டும்.

பணிகள் விரைவாக நடந்து வரு வதால் 2007 டிசம்பருக்குள்ளாக அனைத்துப் பணிகளும் முடிநது 2008 ஜனவரி முதலாம் திகதி கால்வாயில் முதல் கப்பல் செல்லும். கால்வாய தோண்டும் பணியில் தற்போது ராமேஸ் வரம், கோடியக்கரையைச் சேர்ந்த 50 தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர். திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படடவுடன், திட்டத்தை செயல்படுத்த கிளார்க் முதல் அதி காரிகள் வரை தேர்வுசெய்யப்பட வுள்ளனர். இதனால் ஆயிரம் பேருக்கு வேலைகிடைகக்கும்.

கடலோர மாவட்ட மீனவர்களின் மீன்சார் விழிப்புணர்வு பயிற்சிக்காக ரூ.60 கோடியை துறைமுகம் ஒதுக்கி யுள்ளது. அப் பயிற்சிக்காக 20 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன. மீனவாகளுக்கு பயிற்சியளிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் கிராமத் திற்கு சாலை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் செய்துதரப்படும். ராமேஸ் வரத்தில் ரூ.45 கோடியில் சிறிய துறை முகம் உருவாக்கப்படும். தொண்டி, மல்லிப்பட்டினம், சேதுபாவா சத்திரத் தில் மீன்பிடித் துறைமுகம் அமைக் கப்படும். இத் திட்டங்களுக்கு மத் திய, மாநில அரசுகளின் அனுமதிக் காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் என்றார். (த)

# நினைவெழுச்சி நாளும் நூல் வெளியீட்டு நிகழ்வும்

(கொழும்பு)

தமிழீழ தாயக விடுதலைக்காய் தமது இன்னுயிர்களை ஈந்த மூத்த தளபதிகளை நினைவு கூர்ந்து கனடா நாட்டின் ரொறன்ரோ நகரில் நினை வெழுச்சி நாள் நிகழ்வு கடைப்பிடிக் கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான மக்கள் மத்தி யில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம் எழுதிய "போரும் சமாதானமும்" நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

லெப்.கேணல் விக்டர்,தியாகி லெப்.கேணல் திலீபன், லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன், 2ஆம் லெப்.மாலதி,கேணல் சங்கர் மற்றும் கேணல் ராயு ஆகிய மாவீரர் களை நினைவுகூர்ந்து இந் நிகழ்வு கனடா நாட்டின் ரொறன்ரோ நகரிலுள்ள சென்ரல் ரெக் பாடசாலை கலையரங் கில நடைபெற்றது.

நிகழ்வில்,2ஆம் லெப்.தனேந்திரன், லெப்.தவமலர், 2ஆவது பொறியிய லாளர் தணிகைமாறன் ஆகிய மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி தேவ குஞ்சரி துரைசிங்கம் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைத்து ஈகச் சுடரினையும் ஏற்றினார்.

பொதுச் சுடரினை மாவீரர் மகிழனின் தந்தையார் ஏற்றிவைத் தார். (த)

# சந்திரிகாவின் பொறுப்புகளை 6 அமைச்சர்கள் ஏற்றனர்

(கொழும்பு)

யுனஸ்கோ மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றுள்ளதால் அவர் வகித்த பொறுப் புகளை 6அமைச்சர்கள் பொறுப் பேற்றுக் கொண்டுள்ளனர்.

இதன்அடிப்படையில் அமைச்சர் ரடணசிறி விக்கிரமநாயக்க பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், மங்கள சமரவீர பாடசாலை கல்வி பதில் அமைச சராகவும், தினேஸ் பதில் அமைச் சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

லசந்த அழகியவன்ன போக்கு வரதத்துத்துறை பதில் அமைச்சராக வும், திலான் பெரேரா ஊடகத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர். தஸநாயக்க புனர்வாழ்வு பதில் அமைச்சராகப் பதவியேற்றுள் ளார். (த)





கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மங்கள விளக்கேற்று வதையும், அருகில் கல்லூரி அதிபர். ந. சிவகடாச்சம் மற்றும் கலந்துகொண்ட விருந்தினர்களையும் முதலாவது படத்திலும்,

இப் பாடசாலை உயர்தர வகுப்பைச் சேர்ந்த த. தயேந்திரன் என்ற மாணவனால் செய்யப்பட்ட சி. வை. தாமோ தரம்பிள்ளையின் சிலை திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட சிலையுடன் ஆசிரியர்களை மறுபடத்தி லும் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ரி.விமல)

# ‘புஷ்ஷிடம் பொய்சொல்லி பணம் கறக்கும் முஷாரப்’

## ‘வோஷிங்டன் போஸ்ட’ விமர்சனம்

(வோஷிங்டன்)

தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொய் சொல்லி அமெரிக்க அதிபர் புஷ் நிர்வாகத்திடம் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கோடிக்கணக்கான டொலரை வாங்குகிறார் என்று அமெரிக்க பத்திரிகையான ‘வோஷிங்டன் போஸ்ட்’ தலையங்கம் எழுதியுள்ளது.

அமெரிக்காவில் புகழ்பெற்ற பத்திரிகையான ‘வோஷிங்டன் போஸ்ட்’ பாகிஸ்தான் அதிபரைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

‘ஜெனரல் முஷாரப்பின் பித்தலாட்டம்’ என்ற தலைப்பில் அப் பத்திரிகை முஷாரப்பின் முத்திரையைக் கிழித்துள்ளது. அதில் 6 ஆண்டுகளுக்கு முன் இராணுவப் புரட்சியில் ஆட்சியை பிடித்த முஷாரப் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெறப்போவதாகச் சொல்லி ஏமாற்றுகிறார். 2001ஆம் ஆண்டு இஸ்லாமிய மதப பள்ளிக்கூடங்களை சீரமைப்பதாகக் கூறினார். அதைக்கூட செய்யவில்லை.

ஆப்கானிஸ்தானில் செயல்படும் ‘தலிபான்’ இயக்கம் பாகிஸ்தானில் முகாம் அமைத்து ஆயுதப் பயிற்சிபெற அனுமதித்தார் என்று எழுதியுள்ளது. தீவிரவாதிகளைத் தீர்த்துக் கட்டுவதறகு நடவடிக்கை எடுக்கிறேன் என்று முஷாரப் சொன்னதை புஷ் நம்பிவிட்டார். முஷாரப் சொன்னதை செய்கிறாரா? என்று கண்காணிக்காது புஷ் நிர்வாகம் ஆண்டு தோறும் கோடிக்கணக்கான டொலரை பாகிஸ்தானுக்கு அள்ளிக்கொடுக்கிறது. தீவிரவாதிகளை ஊக்குவிப்பதே முஷாரப் தான் என்றும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் முஸ்லிம் பெண்கள் கற்பழிப்புப் பற்றியும் முஷாரப் முன்னுக்குப்பின் முரணான கருத்தையே சொல்கிறார் என்றும் அது மேலும் கண்டித்துள்ளது. (ற)

# 77 ‘எப்-16’ ரக விமானங்களை அமெ.விடமிருந்து பாக்.கொள்வனவு

அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் 77 எப்-16 விமானங்களை வாங்க இருப்பதாக அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஜெனரல் ஜெகாங்கிர் கராமத் கூறினார்.

எப்-16 ரகத்தைச் சேர்ந்த 77போர் விமானங்களை பாகிஸ்தான் வாங்கவுள்ளது. மூன்றாம் நாடு ஒன்றிடம் அந்த விமானங்களை அமெரிக்கா வாங்கித் தரும். ஆயினும் அதில் நவீன தொழில்நுட்பங்களை அமெரிக்கா பொருத்தித்தரும்.

எப்-16 விற்பனை பேரத்திற்கு அமெரிக்க அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துவிட்டது. அமெரிக்க பாராளுமன்றத்தில் அது தொடர்பாக அக்டோபர், நவம்பர் மாதங்களில் விவாதம் நடக்கும்.

எப்-16 ரக போர் விமானங்களைத் தவிர நவீன கோப்ரா ரக ஹெலிகாப்டர் விமானங்களையும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது. இத்தகைய 20 ஹெலிகாப்டர் விமானங்களை அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் வாங்கவுள்ளது.

மூன்றாம் தரப்பிடமிருந்த போர் விமானங்களை அமெரிக்கா வாங்கித் தருவதால் அவற்றின் தரம் பாதித்துவிடாது. எதிர்வரும் டிசம்பர் மாதததில் இரு எப்-16 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும். 20 போர் விமானங்கள் அடுத்த ஆண்டில் கிடைக்கும் .மீதமுள்ள 55போர் விமானங்கள் 2007ஆம் ஆண்டில் கிடைக்கும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இந்தப் பிராந்தியத்திற்கு வருகை தரக்கூடும். அப்போது அவர் பாகிஸ்தானுக்கும் வரவுள்ளாா.

அரசியல், பொருளாதாரம், சமுதாயத் துறைகளில் பாகிஸ்தான், அமெரிக்கா இடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுகிறது. அணு சக்தி தொழில்நுட்பம் தொடர்பாக அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு உருவாகி வருவதை பாகிஷ்தான் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

பாகிஸ்தானின் எரிசக்தித் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. எதிர்காலத்தில அமெரிக்க அணுமின் விசை நிலையங்களை பாகிஸ்தானில் அமைத்திட நாங்கள் விரும்புகிறோம் இவ்வாறு அவர் கூறினார். (ற)

# இலண்டன் தொடர் குண்டுவெடிப்பு; முக்கிய எதிரியின் படம் வெளியீடு

இலண்டன் குண்டுவெடிப்புக்குக் காரணமான நான்கு நபர்களில் ஒருவரது புகைப் படத்தை பொலிஸார் நேற்று முன்தினம் வெளியிட்டனர். இலண்டன் வன்செயலில் ஈடுபடுவோரைக் கண்காணிக்க பல இடங்களில் நுண்கமராக்கள் வைக்கப்பட்டுள்ளன. அதில் இந்த நபரின் உருவம் பதிவாகியிருக்கிறது.

கடநத ஜூலை மா்தம் 7ஆம் திகதி அந்த நபர் வடககு இலண்டனில், காலை 9 மணிக்கு ஓர் அழகு நிலையத்திலிருந்து வெளிவரும் போது அந்தப் படம் பதிவாகியிருக்கிறது. இதற்கு 13நிமிடங்கள் கழித்துதான் ரயில்களில் குண்டுவெடித்தது. கமராவில் சிக்கிய படத்தில் உள்ளவரின் பெயர் ஹசிப் ஹுசன் (வயது-18) எதிரிகளின் கும்பலில் மிக இளையவர் இவர்.

லூதன் என்ற இடத்திலிருந்து இவர்கள் நான்கு பேரும் சேர்ந்தே கிங்ஸ் கிராஸ் என்ற இடத்துக்கு வந்தனர். அங்கிருந்து அவர்கள் தாங்கள் திட்டமிட்ட இடத்துக்கு பிரிந்து சென்றனர். அவர்களில் மூன்று பேர் காலை 9.15மணிக்கு ரயில்களில் குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதன்பின் அந்த 3 பேரையும் செல்போனில் தொடர்புகொள்ள ஹுசைன் முயன்றார். முடியவில்லை.பின்னர் ஈஸ்டன் ஸ்டேஷனுக்கு நடந்துசென்று அங்கு 30ஆம் நம்பர் மாடி பஸ்ஸில் ஏறினார். 9.47மணிக்கு குண்டுகளை வெடிக்கச் செய்தார் என்று பொலிஸார் கூறினார். (ற)



தைவானில் வீசிய ‘லாங் வாங’ சூறாவளியில் சிக்கிய சரக்கு கப்பல் குவாலீன் நகர கடற்கரையில் நேற்று முன்தினம் தரைதட்டி உடைந்தது.



சுற்றுலாப் பயணிகளைக் கவர சீனாவில் என்னவெல்லாமோ வித்தை காட்டுகின்றனர். தேசிய தினத்தை முன்னிட்டு ஜியாங்சு மாகாணத்தில் நான்ஜிங் நகரில் உள்ள ஜுவான்வுஹு பூங்காவில் நேற்று இப்படி ஒரு சாகசம் நடந்தது. சீனர் ஒருவர் தன்னுடைய கண் இமைகள் இரண்டிலும் கொக்கியை மாட்டி அதில் நீர் நிறைந்த வாளிகளை தொங்கவிட்டு பயமுறுத்தினார். வாளிகள் முழுக்க தண்ணீர் இருந்தது... அதில் சந்தேகமே வேண்டாம்!

# ஹெரோயின் கடத்திய 4 பாகிஸ்தானியருக்கு குவைத்தில் பகிரங்க தூக்குத் தண்டனை

குவைத் நாட்டுக்குள் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தி வருபவர்களை அந்த நாட்டு அரசு பகிரங்கமாக தூக்கில் போடுவது வழக்கம்.

இநத நிலையில் கடந்த 2002ஆம் ஆண்டு பாகிஸ்தானைச் சேர்ந்த 4பேர் போலி கடவுச்சீட்டு மூலம் குவைத் நாட்டுக்குள் திருட்டுத்தனமாக நுழைந்து பிடிபட்டனர்.

கூட்டுக் குளிகை வடிவ மாத்திரைகளில் அவாகள் மறைத்துவைத்து கடத்த முயன்ற ஹெரோயின் போதை மருந்தும் பிடிபட்டது.

இந்த 4 பேருக்கும் குவைத் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்திருந்தது. நேற்று முன்தினம் அந்த 4 பேரும் பொதுமக்கள் முன் பகிரங்கமாக தூக்கில் போடப்படடனா். குவைத்தின் அரசு செய்தி நிறுவனமான குனா இதை உறுதிப்படுத்தியிருக்கிறது.



இந்த 4 பேரை தூக்கில் போட்டதன் மூலம் குவைத்தில் கடந்த 95ஆம் ஆண்டில் இருந்து போதைப பொருள் கடத்தலுக்காக தூக்கில் போடப பட் டவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

குவைத் நாட்டில் கொலை மற்றும் ராஜ துரோக குற்றத்துக்காகவும் பகிரங்கத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# 100 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சீறுகிறது ‘இலமேட்பெக்’ எரிமலை

(பாலோ கேம்பனா)

வட அமெரிக்க நாடான எல்சல்வடோரில் உள்ள இலமேட்பெக் என்ற எரிமலை நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

எரிமலையின் சீற்றம் அதிகமாகி வருவதால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்கின்றனர்.



பாலோ கேம்பனாவிற்கு மேற்கில் 60 கி.மீ. தொலைவல் 24 எரிமலைகள் அடங்கிய மலைப்பகுதி உள்ளது.

கடல மட்டத்திலிருந்து ஏழாயிரத்து 800 அடி உயரத்தில் இந்த எரிமலைகள் அமைந்துளளன. இதில் இலமேட்பெக் என்ற எரிமலையே மிகப்பெரியது. இந்த எரிமலையை சுற்றிலும் மிகப் பெரும் அளவில் கோலம்பத் தோட்டங்கள் உள்ளன.

நேற்று முன்தினம் காலை இலமேட்பெக் எா்மலை கடும் சீற்றத்துடன் வெடிக்கத் தொடங்கியது. எரிமலைக் குழம்புகள் 16 கி.மீ சுற்றளவிற்கு வெடித்து சிதறியது. இதனால் அப்பகுதி முழுவதும் செந்நிறமாகக் காட்சியளிக்கின்றது. எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்தனர். வீடுகள் மற்றும் வாகனங்கள் எரிமலை குழம்பில் சிக்கி சாம்பலாயின. கோப்பி பயிரிடப்பட்ட நிலங்களும் தப்பவில்லை. ஏராளமான மரங்கள் எரிந்து நாசமாயின.

இதனையடுத்து நான்காயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

இலமேட்பெக் எரிமலை இதற்கு முன்னதாக 1904ஆம் ஆண்டு வெடித்துச் சிதறியது. 100ஆண்டுகளுக்குப் பின்பு தற்போது மீண்டும இவ் எரிமலை குழம்பை கக்கத் துவங்கியுள்ளது.

எரிமலையின் சீற்றம் கடந்த முறையைக் காட்டிலும் தற்போது அதிகமாக உள்ளதாக வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

மனிதர்கள் இன்னும் பண்பாடு அடையவில்லை. ஓநாய்க் கூட்டங்களின் உணர்ச்சி இன்னும் அவர்களிடம் குடி கொண்டிருக்கிறது. - ப்ராய்டு

வலம்புரி

# தென்னிலங்கை ஊடகங்கள் சமாதானத்திற்காகப் பாடுபடவேண்டும்

"ஊடகப் பயங்கரவாதம்" என்ற சொற்பதம் சமகாலத்தில் உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நடுநிலையோடு உண்மையை எடுத்துரைக்காமல் நாட்டில் யுத்தமும் வன்முறையும் வெடிக்கும்வகையில் ஊடகங்கள் செயற்படுவதை ஊடகப் பயங்கரவாதம் என்ற வகுதிக்குள் அடக்கமுடியும்.

இலங்கையில் தென்னிலங்கைப் பத்திரிகைகளிலும், பிற ஊடகங்களிலும் இதுவிடயத்தில் முதன்மை பெறுகின்றன.

குறிப்பாக இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதனை அடிக்கடி வலியுறுத்துவதாக அவற்றின் போக்கு அமைந்துள்ளது. இதனால் சிங்கள மக்களிடையே இனவாதத்தைத் தூண்டும் தீயசெயலை அந்த ஊடகங்கள் பரப்பி வருகின்றன.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து அந்த ஊடகங்கள் பக்கச்சார்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டு இருந்தால், இன்று இலங்கைத்தீவு உலகின் அழகிய நாடு, என்ற பெருமையோடு கொடிகட்டிப் பறந்திருக்கும்.

ஆனால் தென்னிலங்கைப் பத்திரிகைகளின் "பயங்கரவாதம்" நாட்டையே குட்டிச்சுவராக்கி விட்டது. உண்மைக்குப்புறம்பான செய்திகளை வெளியிடுவதோடு, உண்மையான செய்திகளை மறைப்பதும் ஊடகப் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியே ஆகும். இதனைத் தென்னிலங்கை ஊடகங்கள் சர்வசாதாரணமாகச் செய்துவருகின்றன.

தமிழ்மக்கள் சிங்களவர்களின் முதலாவது எதிரி என்பதுபோலவும், தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட்டால் அது நாட்டை இரண்டாகப் பிரித்துவிடும் என்று அந்த ஊடகங்கள் கருத்து வெளியிட்டுவருகின்றன.

ஊடகங்களை மட்டும் நம்பிக்கொள்ளும் சாதாரண சிங்கள மக்கள் தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை விளங்கமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதன்காரணமாகவே தென்னிலங்கையில் ஜே.வி.பி. போன்ற பேரினவாதிகளின் கைஓங்கி வருகின்றது.

ஊடகங்கள் நடுநிலையோடு நின்று தகவல்களை வெளியிடுமாகவிருந்தால் எல்லா இன மக்களும் ஒற்றுமையாகவும், சுதந்திரமாகவும் வாழமுடியும்.

மக்களுக்கிடையேயான நல்லுறவை - ஒற்றுமையை ஏற்படுத்தும் தார்மீகப் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஒருநாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நான்கு தூண்களில் பத்திரிகையும் ஒன்று என்ற உண்மையை தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் உணர்ந்து கொள்வார்களாயின், மேற்குலகு போன்று இயங்கும் மனித சுதந்திரம் உன்னதமாகப் பாதுகாக்கப்படும் சூழ்நிலை உருவாகும்.

ஆனால், அந்த நிலைதான் இங்கு இல்லையே. தென்னிலங்கையில் வெளிவரும் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் நடுநிலையோடு இயங்கவில்லை என்பதற்கான ஓர் உதாரணமாக அண்மையில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு அந்த ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடலாம்.

லட்சக்கணக்கான தமிழ்மக்கள் ஒன்றுகூடி தங்கள் உரிமையை வலியுறுத்திய செய்திக்குச் சிறிதேனும் இடங்கொடுக்க அந்த ஊடகங்களால் முடியவில்லை எனில் அவை என்ன நோக்கத்திற்காக செயற்படுகின்றன என்பது தெளிவாகின்றதல்லவா? இந்தநிலை மாற வேண்டும்.

# புலிகள் மீதான ஐரோ. ஒன்றியத்தின் பயணத்தடை பேரினவாதிகளுக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடே

## தொழிலாளர் தேசிய சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது பயணத்தடையை விதித்தமையானது பிழையான காரியம் என ஐரோப்பிய ஒன்றியம் உணர்ந்துகொள்ள பொங்குதமிழ் மற்றும் தமிழ் எழுச்சி நிகழ்வு என்பன வழிவகுத்துள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது பயணத்தடையை விதித்த கால கட்டத்திலேயே நிகழ்த்தப்பட்டன.இவை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே மேற்கொள்ளப்பட்டவையாகும்.

இதில் பங்குகொண்டோரின் உணர்வுகளை ஐரோப்பிய ஒன்றியம் புரிந்துகொள்ளுமானால் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கை தவறானது என்பதை ஏற்றுக்கொள்ளும்.

1956,1958 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளிலும் அரச பயங்கரவாதத்தின் துணையுடன் தமிழ் மக்களின் உயிர்களும் உடமைகளும் நாசமாக்கப்பட்ட போதும் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்ட போதும் அது தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் என்ன நடவடிக்கையை எடுத்தன?

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் அந்த நாடுகள் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை 1948ஆம்ஆண்டுக்கு முன்னரேயே தீர்க்காத வரலாற்றுத் தவறுக்குக் காரணமான பிரித்தானியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு துணைபோயுள்ளமையை மீண்டும் ஒருமுறை இலங்கையின் பேரினவாதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளதாக அச் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

# அமைதி முயற்சிகளை முன்னெடுக்க தேசிய சமாதானசபை வலியுறுத்தல்

அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று தேசிய சமாதான சபை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அதன் நிர்வாக இயக்குநர் ஜெகான் பெரேரா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அமைதிப பேச்சு தொடர்பான தற்போதைய அணுகுமுறைகள் தோல்வியடைந்துவிட்டன. மூன்றரை ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகளை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மதித்து நடக்க வேண்டும். மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற இரு தரப்பினரும் தங்களது அணுகுமுறைகளை மாற்ற வேண்டும்.

ஐரோபபிய ஒன்றியம் விதித்துள்ள தடையானது இலங்கை இனப்பிரச்சினை குறித்த சர்வதேச சமூகத்தின் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சர்வதேச சமூகம் செலுத்துகிற அக்கறையை செயற்படுத்த முனையும் நிலையில் இனப்பிரச்சினையில் தொடர்புடைய இரு தரப்பினரும் தங்களது முரண்களுக்குத் தீர்வுகாண முடியாமல் இருக்கின்றனர்.

சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இருதரப்பினரும யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். தற்போதைய வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நீடித்தால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அமைதி முயறசிகள் மீதான நம்பகத்தன்மை இல்லாது போய் விடும். இதனால் அனைத்துத் தரப்பினருமே பாதிக்கப்படுவர்.

இந்த வன்முறைகளே அமைதி முயற்சிகளின் தோல்விகளுக்கு முதன்மைக் காரணமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்து தமிழ் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்முறைகளை அரச படையுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்கள் மேற்கொள்வதாகவும் தமிழ்ச்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

இத்தகைய குழுக்களுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசாங்கம் இயங்காமல் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில செயற்படுத்த முன்வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

# அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்றது அரசு மதமாற்றத் தடைச்சட்டத்தை கைவிட இணக்கம்

(கொழும்பு)

அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கைவிட அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துடன் அமெரிக்க அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களின் போது இச்சட்டம் தொடர்பாக அமெரிக்காவின் கவலை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அரச அதிகாரிகள்,பிக்குகள், இந்துக்கள், முஸ்லிம்கள் உள்ளடங்கிய மதப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடாத்தப்பட்டதாகவும் அனைத்துப பிரிவினரும் மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு எதிர்ப்பாக இருப்பதாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நாடாளுமன்றத்தில் மதமாற்றத் தடைச்சட்டத்தைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவினர் வலியுறுத்தி வருவதையடுத்து இம் முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுளளது.

இந்தியாவில் 6 மாநிலங்களில் இந்த மதமாற்றத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றபோதும் முறைகேடாக அது பயன்படுத்தப்படுவதாக புகார்கள் வந்துள்ளதாகவும் மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்காவின் 2005ஆம் ஆண்டு சர்வதேச அறிக்கையில் இலங்கையிலும் இதுபோன்ற நிலைமை இருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இந்த அறிக்கை இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

இதனிடையே, அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் உள்ள இலங்கை புத்த ஆலயத்தைச் சேர்ந்த தலைமை குருவான மகாரகம தம்மசிறீ தேரர், இலங்கையில் கட்டாய மதமாற்றம மேறகொளளப்பட்டு வருவதாகவும் குறிப்பாக ஆழிப்பேரலைக்குப்பின் இது அதிகரித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் கேட்டுக்கொண்டால் இதற்கான ஆதாரங்களைக் கையளிக்கவும் தயாராக இருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

# ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்கள் யதார்த்த பூர்வமானவை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில விக்கிரமசிங்க முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் யதார்த்த பூர்வமானது என அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

எமது கட்சி ஜனாதிபதி வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டின் அனைத்துத் துறைகள் குறித்தும் கவனம செலுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வெளியிடப்படவுள்ளமை துரதிஷ்ட வசமானது என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்களை செயற்படுத்த போதுமான நிதியில்லையெனக் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனை முற்றாக நிராகரிக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# தூத்துக்குடி-கொழும்பு இடையே கடல் வழியாக கேபிள் இணைப்பு

(தூத்துக்குடி)

இந்திய-இலங்கை நாடுகளின் தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்துவதற்காக தூத்துக்குடியிலிருந்து கொழும்பு வரை கடல்வழியாக கேபிள் லைன் போடப்படவுள்ளது.

அதற்கான முதற்கட்டப் பணிகள் தூத்துக்குடி மெயின் தொலைபேசி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கான செலவை இரு நாடுகளும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளும்.

270 கடல் மைல் தொலைவிலான இப்பணி முடிந்தவுடன் தூத்துக்குடியிலிருந்து கொச்சி வரை கடல்வழியாக கேபிள் போடப்படும்.

இத்தகவலை தூத்துக்குடி பி.எஸ்.என்.எல். பொது மேலாளர் பத்மநாபம் தெரிவித்தார். (த)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

புண்ணியச் செயல்கள் அனைத்தும் வீடு பேற்றுக் கருவியாக இருப்பதால் பயனுள்ளவை. புண்ணியச் செயல்கள் செய்பவனுக்கே நன்மை செய்கின்றன. பிறருக்கு அதனால் ஒருபோதும் நன்மை இல்லை.

சுவாமி விவேகானந்தர்

# லண்டன் சென்ற விமானத்தில் குண்டுப்புரளி புறப்பட்ட சிறிதுநேரத்தில் தரையிறங்கியது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத்தளத்தில் இருந்து லண்டன் நோக்கிப் புறப்பட விருந்த விமானத்தில் குண்டு வைக்கப் பட்டதாக வெளியான தகவலினை அடுத்து அவ்விமானம் தரையிறக்கப் பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

யு.எல்.300 என்ற பணிகள் விமானம் 257 பயணிகளுடன் நேற்று பிற்பகல் 1.54 மணிக்கு லண்டனை நோக்கி புறப் பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் விமானத்திற்கு குண்டு எச்சரிக்கை விடுக கப்பட்டதை அடுத்து பிற்பகல் 2.34 மணிளவில் கட்டுநாயக்கா விமான தளத் தில் மீண்டும் தரை இறக்கப்பட்டது.

இந்நிலையில் விமான நிலையத்தில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற் றன. எனினும் குண்டு எதுவும் கண்டு பிடிக்காத நிலையில் பயணிகள் வேறொரு விமானம் மூலம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(ச-4)

## ஜனாதிபதி....

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

அதனடிப்படையில் பிரதான இரு ஜனாதி பதி வேட்பாளர்களையும் இ.தொ.கா. சந்தித் துக் கலந்துரையாடியுள்ளது.

இது தொடர்பாக கடந்தவாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் இறுதிச் சுற்றுப்பேச்சுகளை நடாத்த இ.தொ.கவுக்கு ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதன் மூலம் மகிந்தவுக்கான தோட்டத் தொழிலா ளர்களின் வாக்குகளைத் தடுக்கமுடியும் என எண்ணியுள்ள ஜனாதிபதி, ரணிலை ஆதரித்தால் ஆறுமுகம் தொண்டமானின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருப்பதாக உறுதியளித்துள் ளார் என ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் இந்த நட வடிக்கையைத் தடுக்கும்வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தொண்டமானுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஜே.வி.பி உருவாக்கியுள்ளதாக சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி வேட்பாள ருக்கான ஆதரவு தொடர்பான இறுதிமுடிவை இ.தொ.கா நாளை வெளியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## கடற்புலிகள்....

திருகோணமலைத் துறைமுகத்தைப் படம் பிடித்த குற்றச்சாட்டில் நால்வரையும் திருகோணமலைப் பொலிஸார் நேற்று முன் தினம் கைதுசெய்தனர்.

குறித்த நால்வரையும் நேற்று நீதிமன் றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்ட நால் வரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப் படும் படப்பிடிப்புக்கருவிகளை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிசா ருக்கு உத்தரவிட்டது.

(ச-4)

## திருமலை....

அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்து

பொதுமக்கள் இப்பிரதேசத்துக்குள் பிரவேசிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதென அந்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

எதிர்காலத்தில் யுத்த சூழ்நிலை ஏற்படுமா னால் இந்த சம்பூர் விமான ஓடுபாதையா னது திருகோணமலை கடற்படை முகாம், துறைமுகம் மற்றும் ஏனைய பாதுகாப்புத் தளங்களுக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடுமென பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன என அச்செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-4)


03.10.2005 முதல்
01.11.2005 வரை
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
விசேட கழிவு உடனே விஜயம் செய்யுங்கள்
லைடன் புடவை நிலையம்
(C-அ-1688)
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம் T.P: 222 2381



அன்பு மாணவர்களே!
இன்று நவராத்திரி பூசை ஆரம்பமாவதையொட்டி
'நவராத்திரிப் பாமாலை'
பகுதியை வலம்புரி வெளியிடுகிறது. மாணவர்களாகிய உங்களின் கவி தையும் இதில் இடம்பெறவேண்டுமாயின், நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம், பெயர் ஆகிய விபரங்களுடன்
"வலம்புரி"
இல. 03, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.
குறிப்பு:- கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ.ர்)


# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் சந்தேக நபருக்கு பிணை மறுக்கக்கோரி பெண்கள் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோ கத்திற்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி நீதிமன்றக் காவலில் வைக் கப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாள ருக்கு பிணை வழங்கப்படக்கூடாது எனக் கோரி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் அமைப்புக்கள் நேற்று ஆர்ப்பாட் டம் ஒன்றினை நடத்தின.

யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம், கிராமிய மட்ட பெண்கள்அமைப்பு, அகதிகள் புனர்வாழ்வுக்கழக அரங்க செயற் பாட்டு அமைப்பு ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷங்களை எழுப்பினர்.

சந்தேகநபரான யாழ். பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த விரிவுரையாளருக்கு எதிரான வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது சந்தேக நபரிற்கு எதிரான விசாரணைகள் இன்னும் முற்றுப்பெறாத காரணத்தினால் பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்த நீதிமன்றம் தடுப்புக்காவல் உத்தரவினை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடித்துள்ளது. (ச-4)

# மண்டூரில் பொலிஸார் மீது நேற்றிரவு தாக்குதல்

(மட்டக்களப்பு)

நேற்றிரவு 7.30 மணியளவில் மட்டக்களப்பு மண்டூரில் பொலிஸார் பயணம்செய்த ஜீப் வண்டி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாலைமுனை ஊடாக ஜீப் வண்டி சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாதோர் இத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதன்போது சப்.இன்பெக்டரான எல்.விக்கிரம (வயது 42) என்பவர் காயமடைந்துள்ளார். சம்பவ நேரம் ஜீப்பினுள் நான்கு பொலிஸார் இருந்துள்ளனர்.

ஜீப்பிற்கு தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் திருப்பித் தாக்குதலை நடத் தியுள்ளனர். இதனால் தாக்குதல் நடத்தியவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரி விக்கப்பட்டது. அப்பகுதியில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (ச-4)

# பொலநறுவையில் குண்டுத்தாக்குதல் குடும்பஸ்தர் பலி; மனைவி காயம்

(பொலநறுவை)

பொலநறுவை வெலிக்கந்த பிரதேசம் குடாப்பொக்கன் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வீடு ஒன்றின் மீது இனந்தெரியாத நபர் கள் நடத்திய தாக்குதலில் உறக்கத் தில் இருந்த வீட்டின் உரிமையாளரான குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள் ளார்.

இச்சந்தர்ப்பத்தில் காயமடைந்த அவரது மனைவி பொலநறுவை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். கொல்லப்பட்டவர் கந்தையா பொன்னுராசா என அடையாளம் காணப் பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவரின் மகன் கருணா குழுவுடன் தொடர்புடையவராக இருந் தவர் என்றும் பின்பு அதிலிருந்து அண் மைக்காலத்தில் விலகிக்கொண்டவர் என்றும் கூறப்படுகிறது. சம்பவத்தின் போது கொல்லப்பட்டவரின் மகன் வீட் டில் இருந்து தப்பிச்சென்றுள்ளார். கைக்குண்டுகள் வீசியும் துப்பாக்கி பிர யோகம் செய்தும் இந்தத் தாக்குதலை நடாத்திய நபர்கள் பின்பு தப்பிச் சென் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ற)

## பன்னிரண்டு....

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளு மாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மரண விசாரணையின் பொருட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது.

இதேவேளை சுன்னாகத்தில் நேற்று மாலை 6.25 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நகைக்கடை உரிமையா ளர் ஒருவர் கொல்லப்பட்டார். சுன்னாகம் கந்தரோடையில் உள்ள அவரது கடையில் இருந்த சமயம் அவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டினால் நெஞ்சில் படுகா யமடைந்த பிரஸ்தாப நபரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சூட்டுச் சம்பவத்தின்போது சுன்னா கத்தில் வசித்துவந்த பொன்னுத்துரை சுபேந் திரன் (வயது 32) என்பவரே கொல்லப்பட்டவ ராவார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-19,8,4)


மனோகரா
ஸ்ரீகாந்த், சோனியாஅகர்வால் நடித்த
ஒருநாள் ஒருகனவு
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு நமீதா நடித்த
சாணக்கியா
காட்சி நேரம்:
10.30. 2.30, 6.30. 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், தர்ம், பிரகாஷ்ராஜ் நடித்த
அனுமான்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.